


# ரமணோதயம்

ஜூலை 2023
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 22 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2023

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

*அருணை விஜய இதழ், ஜூலை 2023*


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| *1* | ஆசிரியர் உரை | | *3* |
| *2* | இனிவரும் திருநாட்கள் | | *10* |
| *3* | ஔவைக் குறள் | ராம் மோஹன் | *11* |
| *4* | பகவான் ரமணா – அருட்பெருங்கடல் | *Dr.* வேங்கட் *S* ரமணன் | *17* |
| *5* | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | *31* |
| *6* | பயணக் கட்டுரை | | *37* |
| *7* | பசு லக்ஷ்மி | | *51* |
| *8* | என். ஆர். கே *(2)* | வி. நிரஞ்சன் | *53* |
| *9* | ரமண புராணம் | ஆகுரா | *57* |
| *10* | ‘பகவான்’ – அவர் உபதேசம் தான் அவர் | *D.* தியாகராஜன் | *65* |
| *11* | செய்திகள் | | *73* |

# ஆசிரியர் உரை

## உவகைக்கு வழிகாட்டும் உபதேசம்

நமது ஸநாதன தர்மத்தின் அடிப்படை 'உள்ளது' என்பது ஒன்றுதான். அதுவே ஆன்மா. ஏனைய யாவும் அதனுடைய பிரதிபலிப்புகளே என்பதாம்.

இதனையே வேதம்,

'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி'

என மொழிகிறது. யாவருடனும் பரவி இருப்பது இதுவே.

திவ்யோஹ்ய மூர்த: புருஷங்க
பாஹ்யா யந்தரோ ஹ்யஜ

என்று முண்டக உபநிடதம் மொழிகிறது.

"பரமாத்மா சுயஞ்சுடரானது; அது வடிவமற்றது; பிறவாதது; தூயது அனைத்திலும் வியாபித்திருக்கிறது," என்பது இதன் பொருள்.

இந்த அடிப்படை உண்மையை பகவான் எளிய, எழில் மிகுந்த தமிழில் கவி மூலம் எடுத்துரைக்கின்றார்.

இருக்கின்றே னென்கலையோ டேய்ந்தசை தன்ய
வுருசத்தி யத்தா லொளிரும் – பிரபஞ்சஞ்
சர்வஞ்சத் தித்யானஞ் சார்நிட் களஞானஞ்
சர்வ நிராலம்பந் தான். (தேவிகாலோத்தரம், 13)

பொருள்: 'இருக்கின்றேன்' என்ற உணர்வு மாத்ரமான ஒரே அம்சத்துடன் கூடிய சைதன்ய ஸ்வரூபம் எது ஒன்று உளதோ அதுவே சக்தி எனப்படும். அந்த சக்தியின் அம்சத்தினால்தான் இந்த உலகம் அனைத்தும்

பிரகாசிக்கின்றது. அதனால்தான் இந்த பிரபஞ்சமும் சக்தியின் ஸங்கல்பம் என்று சொல்லப்படுகின்றது. அந்த அடிப்படை சக்தியின் அம்சமாகிய மனம், தான் இதுகாறும் கொண்டிருந்த பற்றுக்கள் அனைத்தையும் விட்டு நிற்பதுதான் நாம் அடைய வேண்டிய நிஷ்கள ஞானம். அந்த நிஷ்கள ஞானமே ஆத்மா.

'அஸ்தி இதி உபலப்யதே' – 'இருப்பது' என்ற ஞானத்தாலேயே இது அடையப் பெறுகின்றது. உபாதி கலப்பற்ற அத் தன்னுணர்வே ஆத்ம ஞானம். இதுவே அதன் சொரூப லக்ஷணம். இதனையே 'உள்ளது' என்ற ஒரே சொல்லால் பகவான் விளக்குகிறார்.

இந்த ஆத்ம ஸ்வரூப உணர்வே 'உள்ளது' என்ற அநுபவமே நாம் பிறவி எடுத்ததன் நோக்கம். தனது ஸ்வரூப உணர்வே ஆத்ம தியானம். இதுவே நாம் ஜபிக்கத்தக்க உயர்ந்த மந்திரம். இதுவே உபாசிக்கத் தக்க மூர்த்தி. இடையுறும் எண்ணங்கள் யாவற்றையும் நீக்கி விட்டு, ஸ்வரூப தியானம் ஒன்றையே நீ திடமாகப் பற்றித் துணிவுடன், செல்வாயாக என்று 'ஆத்ம சாட்சாத்கார பிரகரணம்' நூலில் 35ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்.

இதுமந் திரமா மிதுதே வதையா
மிதுவே தியான மெனலு – மிதுவே
தவமாகு மெண்ணங்க ளெல்லாந் தணந்து
சுவரூப சிந்தை துணி.

சித்த விருத்திகள் மனதின் முனைப்புகள் அனைத்தும் நீங்கிய சூழ்நிலையே பேரின்பம். இந்நிலையை அடைய விருப்பு வெறுப்பு இரண்டும் நீங்கிய அனைத்துத் தன்முனைப்புகளையும் கடந்து செல்வதே நேர்வழி என்கிறார் பகவான்.

பெருத்த பேரின்பம் என்பர் பேரறிஞர் சித்த
விருத்தி அனைத்தும் விளிவைக் கருத்தின்
இராதத் துவேஷம் இரண்டும் அகன்ற
நிராசையே நல்ல நெறி. (குருவாசகக் கோவை, 374)

*இங்ஙனம் பற்றுக்கள் ஆசையும் நீத்து இதயத்துள் எவ்வளவு ஆழ்கிறார்களோ அவ்வளவிற்கு பேரின்ப சுகத்தை அவர்கள் அனுபவிப்பர். இதயத்தில் முற்றிலும் ஆழ்ந்து தன் முனைப்பு முற்றிலும் கரைந்து, எல்லையில்லா ஆனந்தத்தை அனுபவிப்பர்.*

*எவ்வளவிற் றாக விதயத்தே யாழ்வார்மற்*
*றவ்வளவிற் றாக வநுபவிப்பார் – செவ்வி*
*விரூபமா நின்று விளங்குமகண் டான்ம*
*சொரூபமாத் துன்னு சுகம். (குருவாசகக் கோவை, 451)*

*அதேபோன்று 'ஆன்ம நிலைத் திறன்' என்ற அதிகாரத்தில் உண்மையான இன்பம் ஆன்ம ஸ்வரூபத்தை அறிதல் என்பதே; அதைத் தவிர உலகில் வேறு ஒன்றுமே கிடையாது. இந்த உண்மையை ஆழமாய் உணர்ந்து ஒரு நொடியும் அந்நிலையில் இருந்து விலகாது ஆன்மப் பேரின்பத்தை அநுபவிப்பாய் என்று முருகனார் வாயிலாகப் பகவான் கூறுகிறார்.*

*சுகமென்ப தான்ம சொரூபமே யான்ற*
*சுகமன்றி யில்லை சொரூபம் – சுகமென்ப*
*தொன்றே யுளதவ் வுறுதியுணர்ந் தான்மநிலை*
*நின்றேதுய் யின்ப நெடிது. (குருவாசகக் கோவை, 1029)*

*எல்லையற்ற இந்த ஆனந்தத்தின் உண்மையான தன்மை குறித்து மேஜர் சாட்விக் வினவியபோது, பகவான் இவ்வாறு தெளிவாய் விடையிறுத்தார்.*

*குருவருளால் ஸ்வப்ரகாச அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபத்தை உணர்ந்த சீடன் குருவின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, ஒப்பற்ற இப்பெரும் அனுக்கிரகத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யக் கூடும்? என்று வினவ, குருநாதன் பரிவுடன் பார்த்து, இவ்வனுபவம், நழுவாது காத்து என்றும் நீ ஆனந்த மயமாய் இருந்தால் அதுவே சொரூபக் கைம்மாறு என்று கைவல்ய நவநீதம் (பாடல்கள் 79, 80) கூறுகிறது.*

*இத்தகைய பேரானந்தத்தை அடைந்தவர் அதை விட்டு எப்படி நழுவுவர்? என்ற சாட்விக்கின் கேள்விக்கு*

*அனுபவம் திடமாகாத நிலையில் வாசனைகளால் ஈர்க்கப்பட்டு அறியாமையில் மீண்டும் விழக்கூடும் என்று விளக்கினார் பகவான்.*

*இந்தத் தொடரும் பேரானந்த நிலையில் இடையறாது நீடிக்கத் தடையாயுள்ளவை என்ன என்பது குறித்து பகவான் விளக்கினார். தன்னை உணரா அஞ்ஞானமும், அடிக்கடி எழும் சந்தேகமும், உடல் நான், உலகம் ஸத்யம் என்று நினைக்கும் விபரீதமும் பெரும் தடைகள். இவை மூன்றும் சிரவண மனன, நிதித்யாஸனத்தால் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) மூலம் முற்றிலும் நீங்கும்.*

*தற்கால அனுபவத்தால் பந்தம் நீங்காது அப்போதைக்கு பந்தமற்றாற்போல் தோன்றினாலும் நாசம் அடையாது உள்ளே மறைந்துள்ள வாசனைகள் சாதுக்களை வெளியே தள்ளிவிடும். இதற்கு இடம் கொடுக்காது தன் ஆன்மாவிலேயே நிலைபெற்று நிற்பதால் காலக் கிரமத்தால் வாசனைகள் அனைத்தும் ஒழிந்து போகும். இவ்வாறு தடைகள் முற்றிலும் அற்ற நிலையில் திட ஞானம் எம்முயற்சியும் நாட்டமுமின்றி இயல்பாகவே இடையறாது ஒளிரும். அஞ்ஞானம் மீண்டும் உதிக்காது. இதுவே இறுதியான ஆனந்த நிலை. (ரமண வசனாம்ருதம் 95)*

*பரமஹம்ஸ யோகானந்தரின் செயலாளர் சி.ஆர். ரைட் எழுப்பிய கேள்வி: அத்தகு எல்லையற்ற ஆனந்த நிலையை எப்படி அடைவது?*

*பகவான்: ஆனந்தம் இப்பொழுது இல்லாமல் புதிதாக இனி அடையப் போவதில்லை. நம் ஸ்வரூபமே ஆனந்தம். இதை நாம் உணராததால் மனதில் ஒரு குறை உணர்ச்சி எழுகிறது. இதுவே, எப்படி ஆனந்தத்தை அடைவது என்ற கேள்வியை எழுப்புகிறது. இங்ஙனம் யாருக்குக் குறை எழுகிறது என்று கவனிக்க வேண்டும். ஆழ்ந்த தூக்கத்தில் ஆனந்தத்தை அனுபவிக்கிறோம். விழித்தவுடன் அது மறைகிறது. ஏன்? இடையில் 'நான்' என்ற போலித் தோற்றத்தின் எழுச்சியே அந்த ஆனந்த*

*ஸ்வரூபத்தை மறைக்கிறது. அந்தத் தடை நீங்கி அந்த அகந்தையின் மூலம் எது என நாட வேண்டும்.*

*அந் நாட்டத்தால் அகந்தை தன் மூலத்தில் மறைய தனது உண்மை ஸ்வரூபமான எல்லையற்ற ஆனந்தம் தடையற்று ஒளிர்கிறது. சந்தேகப் பூட்டுகள் அனைத்தையும் திறக்கும் அற்புதச் சாவி இந்த உள்முக நாட்டமே. அதுவே எல்லையற்ற ஆனந்தத்தின் திறவுகோல். (திருவருண்மொழி 106)*

*தனியாக மனம் என்று ஒன்று உள்ளதா? அதனை எப்படி நீக்குவது என்ற சிவப்பிரகாசம் பிள்ளையின் கேள்விக்கு பகவான் விடையளிக்கின்றார்.*

*"நினைவுகளை எல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது தனியாக மனம் என்று ஒரு பொருள் இல்லை. ஆகையால் நினைவே மனத்தின் ஸ்வரூபம். விழிப்பிலும் கனவிலுமே நினைவுகள் எழுகின்றன. எப்படி சிலந்திப் பூச்சி தன்னுள்ளே இருந்து நூல்நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக் கொள்கிறதோ அப்படியே மனமும் தன்னிடமிருந்தே ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னில் ஒடுக்கிக் கொள்கிறது. மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டேபோனால் தானே மனமாய் முடியும்.*

*ஒவ்வொரு எண்ணமும் கிளம்பும்போதே கவனமாய் 'யாருக்கு இது உண்டாகிறது' என்று விசாரித்தால் 'எனக்கே' என்று தோன்றும். பிறகு அந்த 'நான் யார்?' என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திரும்பி விடும். எழுந்த மனமும் அடங்கிவிடும்.*

*இவ்வாறு மனம் இதயத்தில் தங்கினால் எல்லா நினைவுகட்கும் மூலமாய் நான் என்பது போய், என்றுமுள்ள 'தான்' மாத்திரம் விளங்கும்.*

*தானே தானே தத்துவம் இதனைத்*
*தானே காட்டுவாய் அருணாசலா*

*என்பது 'அக்ஷரமணமாலை' வேண்டுகோள்.*

இந்த அடிப்படை வேதத்தை பகவான் விளக்க ஆழ்ந்து சிந்தித்து அறிந்த ஹம்ஃப்ரிஸ், 'இன்டர் நேஷனல் சைகிக் கெஜட்' என்ற பத்திரிகையில் இதைத் தெளிவாய் வெளியிட்டார். பகவானின் ஆன்ம விசாரணையில் மனம் மாய்ந்தபின் மிச்சம் இருப்பது உள்ளது உள்ளபடியான உணர்வு மாத்திரமே. அதுவே 'சத்' (உள்ளது) என்ற பகவானின் உபதேசம்.

இங்ஙனம் அடிப்படைத் தத்துவமான ஸ்வரூபத்தில் (உள்ளது) நிலைபெற்று இருந்த பகவானின் அருட்பார்வை மூலமே நேரடியாக ஆத்மானுபவம் பெற்ற அடியார்கள் உளர்.

*யத்ஸாக்ஷாத்கரணாத் ப⁴வேந்ந புனரா*
*வ்ருத்திர்ப⁴வாம்போ⁴ நிதௌ⁴*

*(தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்)*

அந்த ஆசார்யனின் சந்நிதி விசேஷத்தின் மூலமே அகங்காரம் அழியப்பெற்று ஆத்ம சாட்சாத்காரம் பெற்றவர்கள் இப் பேறுபெற்ற அடியார்.

இந்த அருட்பார்வை மூலமே பெற்ற ஆன்மாநுபவத்தை முருகனார் பாடுகிறார்.

*அன்புப் பணிகொண் டடியேனை யாண்டவன்*
*நின்பவருட் பார்வைக் கிலக்காகி – இன்பதுன்ப*
*தொந்தக் கலக்கமறத் துன்றுசொரூ பானுபவச்*
*சந்தவியல் பெற்றேன் சதிர்த்து.*

*(ரமண ஞான போதம், 4, 866)*

*[தொந்தம் - இரட்டை; துன்று - நெருங்கி]*

எப்படி ஒரு ஸ்பரிச வேதிக் கல் தன்னிடம் வந்த இரும்பைத் தங்கமாக்குகிறதோ, அதுபோன்று ரமண மாமுனிவர் தன் கண்ணோக்கத்தால், நான் ஆன்மாவே என்ற மெய்ஞ் ஞானத்தை எனக்கு அளித்தான். என்னுடைய ஜீவபோத உணர்ச்சியாம் மயக்கம் அப்போதே அழிந்தது என்று குதுகலிக்கிறார் முருகனார்.

*எல்லாக் கவலையும் அற்று இன்புற்று இருப்பதுவே*
*சொல்லாடு முக்தி சுகம். (சொரூப சாரம்)*

இத்தகு உயர்நிலையை அடைந்த ஞானியின் பேரானந்த நிலையை கண்ணன் கீதையில் வர்ணிக்கிறான்.

*ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்ட²ம்*
*ஸமுத்³ரம் ஆப: ப்ரவிஸந்தி யத்³வத்*
*தத்³ வத் காமா யம் ப்ரவிஸந்தி ஸர்வே*
*ஸ ஸாந்திம் ஆப்னோதி ந காமகாமீ (கீதை, 2-70)*

பொருள்: எப்போதும் நிறைந்திருக்கும் சமுத்திரம், நதிகளின் நீர் அனைத்தும் புகுந்தாலும், நிலைமாறாது இருக்கின்றதோ அவ்வாறே ஆசைகள் பலவாறாகச் சூழ்ந்தாலும் அவை ஞானியைச் சிறிதும் பாதிப்பதில்லை. அவை அனைத்தும் அவன் ஆன்மாவிலேயே ஒடுங்கி விடுகின்றன. அவன் மன விசாரம் ஏதுமின்றி எப்போதும் ஆனந்த நிலையிலேயே வாழ்கிறான். எல்லாச் செயல்களையும் விட்டுவிட்டு பற்றற்றவனாய் அகங்கார மமகாரங்கள் இல்லாதவனாய் ஆனந்தத்தில் நிலைபெற்று வாழ்கிறான்.

பரம்பொருள் எதுவோ அதிலேயே புத்தியை நிலைபெறச் செய்து, அதுவே ஆத்மா என அறிந்து, அதிலேயே அடைக்கலம் புகுந்து ஞானம் பெறுபவர் மீண்டும் பிறவிச் சுழலில் வீழாமல் ஆனந்தத்தில் நிலைபெறுகின்றனர். (கீதை, 5-17)

மின் விளக்குகள் இருவகைப்படும், ஒருவகை விளக்குகளில் பல்பின் உள்ளே வெற்றிடம் இருக்கும். பல்பின் உள்ளே உள்ள இழையில் மின்சாரம் செல்லும்போது அந்த இழை ஒளிர்கின்றது. ஞானிகள் இங்ஙனம் தங்கள் இதயத்தில் எண்ணம் ஏதும் இல்லாத வெற்றிடம் ஆக்கிக் கொள்ளும்போது, ஆத்ம சாட்சாத்காரம் அங்கே ஊடுருவி இதயத்தில் ஞான ஒளியாய் பிரகாசிக்கின்றது.

வேறுவகை பல்புகளில் ஆர்கான் போன்று மற்றைய மூலங்களுடன் வினை ஆற்றாத மற்ற வாயுக்களால் நிரப்பப்படுகின்றன. இந்த பல்பின் இழையில் மின்சக்தி செல்லும்போது இழை உள்ள வாயுவில் புகுந்து ஒளிர்கிறது. முருகனார் போன்ற பக்தர்கள் தமது இதயத்தினை வெற்றிடமாக மட்டும் ஆக்கிக் கொள்ளாமல் பரபக்தியால் நிரப்பிக் கொள்கின்றனர். அதில் இறையருள் ஊடுருவும்போது சுகமான ஒளி கிடைக்கிறது.

இங்ஙனம் ஞானம், பரபக்தி இரண்டுமே முக்திக்கு வழியாகிறது என்று அறிகின்றோம்.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

## இனிவரும் திருநாட்கள் 2023

| பூஜை/ விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| குரு பூர்ணிமா | 03-07-2023 | திங்கள் |
| பகவான் அருணையடைந்த தினம் | 01-09-2023 | வெள்ளி |
| நவராத்திரி விழா தொடக்கம் | 15-10-2023 | ஞாயிறு |
| சரஸ்வதிபூஜை | 23-10-2023 | திங்கள் |
| விஜயதசமி | 24-10-2023 | செவ்வாய் |
| தீபாவளி | 12-11-2023 | ஞாயிறு |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 17-11-2023 | வெள்ளி |
| கார்த்திகை தீபம் | 26-11-2022 | ஞாயிறு |
| பகவான் 144 ஆவது ஜயந்தி | 28-12-2023 | வியாழன் |

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### குருவழி

*201: தன்பால் அறியும் தவமுடையார் நெஞ்சகத்துள்
அன்பாய் இருக்கும் அரன்.*

*பொருள்: 'நான் யார்?' என்று விசாரம் செய்து தன்னைத் தானே அறியும் உண்முகத் தவம் செய்யும் ஞானிகள் மனத்தில் சிவம் நிலைத்து நிற்கும்.*

*202. சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித்து இருக்கும் சிவம்.*

*பொருள்: தன்னுடைய எண்ணம் முழுவதுமே சிவத் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் தவ ஞானிகள் மனம் முற்றிலும் சிவமாகவே மாறிவிடும். இதே கருத்தினை மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறுகிறார்:*

*சிந்தனை நின் தனக்கு ஆக்கி நாயினேன் தன்
கண்ணினை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்து விச்சை
மால் அமுதப் பெரும் கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலி இத்தனியனேற்கே.*

*– திருச்சதகம், 03 – சுட்டறுத்தல், பாடல் 6*

*பொருள்: பேரமுதப் பெருங்கடலே! அருணமலையே! செந்தாமரைக் காடு அன்னவனே! ஸ்வயம் ஜோதியே! என் மனம் உனக்கே உரித்தானது. என் விழிகள் இரண்டும் உன் திருப்பாதங்களையே காண்கின்றன.*

நான் செய்யும் பூஜைகள் அனைத்தும் உன் திருவடிக்கே ஆகின. என் பேச்செல்லாம் உன் புகழுக்கே பயன்படுவதாகின. என் ஐம்பொறிகளையும் உன் அருட்கொடைக்கு உரியவை ஆக்கினாய். என்னுள்ளே நீ பிரவேசித்திருப்பதே பெரும் வியப்புக்குரிய ஒன்றாகும். 'இந்திரிய நிக்ரஹம்' (ஒடுக்குதல்), ஐம்பொறிகளை உன் பூஜைக்கே பயன்படுத்தல் இரண்டையும் அறியாத என்னை நீயே வந்து ஆட்கொண்டாயே!

*203. குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு*
*அருவமாய் நிற்கும் சிவம்.*

ஸத்குருவின் திருவடி பணிந்து ஞானம் பெறாதவர்க்கு பரம்பொருள் இதயத்தில் தோன்றாது.

ஆத்ம விசாரம் செய்து 'நான் யார்?' என்று உணரும் ஞானியர்க்கு சிந்தையிலேயே உணர்வாய் சிவம் ஒளிர்கிறது.

*204. தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியில் அல்லால்*
*வலைப்பட்ட மான்அதுவே ஆம்.*

பொருள்: ஞான ஒளி முற்றும் பெற்று மெய்ப்பொருளில் ஒன்றாக சத்குருவின் சந்நிதியிலேயே சாதகனின் ஞானமும் முற்றுப் பெறும். அங்ஙனம் ஞானாசிரியனின் சந்நிதியில் அடைக்கலம் புகாவிடில் வலையில் அகப்பட்ட மான் போல் ஜீவன் உலகப் பற்றுகளால் அலைக்கழிக்கப்படும்.

ஒப்புநோக்குக:

உரியேன் அல்லேன் உனக்குஅடிமை
 உன்னைப் பிரிந்துஇங்கு ஒருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னதுஎன்று
 அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
 என்றுஉன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றுஎன்று அருளிய அருளும்
 பொய்யோ எங்கள் பெருமானே

*பொருள்: பெருமானே! இன்றுவரை நான் இன்றும் உனக்கு முற்றிலும் உடைமை ஆகவில்லை. ஆயினும் உன்னைப் பிரிந்து இருக்க இயலாது தரிக்கின்றேன். இதற்கு என்ன காரணம் என்றும் அறியேன் பேரருளே! என் திருவடிகள் கண்டு சரணடை என்று என்று எழுந்தருளிக் கூறிய சொல்லும் பொய்யோ!”*

*205. நெறிப்பட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிரிவற்று இருக்குஞ் சிவம்.*

*பொருள்: சத்குரு உபதேசித்த விசார மார்க்கத்தினை சற்றும் ஐயமின்றிப் பின்பற்றி மனத்தில் சிறிதும் சலனம் இன்றி ஆத்ம சாதனை செய்பவர்க்கு சிவம் உள்ளத்தில் தங்கி என்றும் பிரியாது இருக்கும்.*

*இதே கருத்தை திருமந்திரத்தில் திருமூலர் கூறுகிறார்:*

*தொழிலறி வாளர் சுருதி கண்ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழிய றிவார் நல்வழி யறிவாள
ரழிவறிவார் மற்றையல்லா தவரே.*

*ஸத்குருவானவர் வேதங்களையும் ஆகமங்களையும் இரு கண்களாகக் கருதுபவர். சற்றும் குற்றம் இல்லாத பரம ஞானி அத்தகைய ஸத்குருவின் திருவடிகளைச் சரணடைந்து வழிபடும் மார்க்கத்தை அறிந்த சாதகர்கள் இறைவனுடன் ஒன்றும் ஞானமார்க்கத்தை நன்கு அறிந்து கொண்டு பின்பற்றுவார்கள். இந்த மார்க்கத்தை அறியாத அவிவேகிகளே மீண்டும் மீண்டும் பிறந்து உழலும் சுழற் மார்க்கத்தைப் பின்பற்றி நாசமடைவார்கள்.*

*இதே கருத்தைப் பட்டினத்தாரும் கூறுகிறார்:*

*குருமார்க்க மில்லாத குருடருடன் கூடிக்
கருமார்க் கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே.*

*நான் சத்குரு காட்டும் மார்க்கத்தைக் காணாது ஞான மார்க்கமும் அறியாத அறிவுக் குருடருடன் சேர்ந்து கொண்டு கருத்தழிந்து கெடுகின்றேன் என்கிறார்.*

தாயுமானவரும் இதே கருத்தை அழகிய உவமையுடன் கூறுகிறார்:

குருமொழியே மலையிலக்கு மற்றமொழி எல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய்.

ஸத்குருவின் உபதேசம் அருள்மலையை இலக்காகக் கொள்வது மற்ற பயனற்ற வார்த்தைகள் எல்லாம் கட்டங்கள் போடாமலேயே பகடை ஆடுவது போன்ற பயனற்ற வேலையாகும் என்கிறார் தாயுமானவர்.

206. நல்லன நூல்பல கற்பினும் காண்பரிதே
எல்லையில் லாத சிவம்.

பொருள்: ஆழ்ந்த மெய்ப்பொருட்களைக் கூறும் பல ஞான நூல்களைப் படிப்பது நல்லதே. ஆனால் படிப்பதால் மட்டும் எல்லையற்ற பரம்பொருளை உணர்வது அரிது.

விளக்கம்: இந்த உயரிய கருத்து பல நூல்களில் விளக்கப்படுகிறது. உபநிஷத்களில் மிக உயரிய ஒன்றான கடோபநிஷத்திலும் இக்கருத்து வெளிப்படுத்தப் படுகிறது.

நாயமாத்மா ப்ரவசனேன லப்[4]யோ
ந மேத[4]யா ந ப3ஹுனா ஶ்ருதேன
யமேவைஷ வ்ருணுதே தேன லப்[4]ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம்

– கடோபநிஷதம், 1.2.23

பரமாத்மாவை ஆழ்ந்த புலமையினாலோ, பலமற்ற முயற்சிகள் மூலமோ, மேதையின் மூலமோ, பல்வேறு பிரவசனங்களைக் கேட்பதன் மூலமோ அறிய முடியாது யாரை உயர்ந்த தகுதி வாய்ந்த சாதகனாக ஆத்மா தேர்ந்து எடுக்கிறதோ அவனுக்கு அது தானே வந்து வெளிப்படுகிறது என்பது இதன் பொருள்.

பகவான் எடுத்துக் கூறிய தமிழ் வேதாந்த நூல்களிலும் இக்கருத்து வலியுறுத்தப் படுகிறது. எடுத்துக்காட்டாக, பிரம்ம கீதையில்,

*வேதம்ஆகம புராணமிருதிகள் வேறா மார்க்கர்*
*ஓதும் ஆகமங் கள்தர்க்கம்ஒன்றோடொன்று ஒவ்வாதாகும்*
*மீதெலாம் ஒக்கப் பண்ணலாவதுஅன்றி இதயதுக்கம்*
*ஆதலால் அனைத்தும் விட்டுஇங்குஅனைத்தும்*
*ஆம்சிவத்தை பார்ப்பான்.*

பகவான் எடுத்துக்காட்டாகக் கூறும் ஸ்ரீ தத்துவராய சுவாமிகளின் 'சசிவன்ன போத'த்திலும் இதன் பயனற்ற தன்மை தீவிரமாய்ச் சுட்டப்படுகிறது.

*புராணம்இதி காசம்எவை யும்பொருள் அனைத்தின்*
*பிராணன்அறி யாதுஉள விடத்திவை பிதற்றே. (31)*
*ஆகம விதங்கள்அறி வார்பரம் அறிவார்*
*யோகமொடு உறங்கும்அவ ரேபரம் உணர்ந்தார் (32)*

என்று "ஞான போதத்தில் கரைந்து விடுபவர் மட்டுமே மெய்ப்பொருளை அறிவர். ஏனையனைத்தும் வெறும் பிதற்றல்களே" என்று அறுதியிட்டுக் கூறுகிறார் ஞானாசிரியர்.

*207. நினைப்பும் மறப்பும் இல்லாதவர் நெஞ்சம்*
*தனைப்பிரி யாது சிவம்.*

**பொருள்:** நினைப்பது, மறப்பது போன்ற மனம் தொடர்பான செயல்கள் அன்றி, எப்போதும் ஆத்ம விசாரத்திலேயே ஈடுபடும் சாதகனை விட்டு பரம் என்றும் பிரியாது.

*208. ஒன்றில்ஒன் றில்லாத மனம்உடை யாருடல்*
*என்றும்ஒன் றாது சிவம்.*

**பொருள்:** 'ஏகம் ஸத்' இருக்கும் பரம்பொருள் ஒன்றுதான் என வேதம் அறுதி இடுகிறது. அனைத்தையும் விடுத்து, அந்தப் பரம்பொருள் ஒன்றின் மீது மட்டுமே மனம் ஒன்றேயே ஆத்ம சாக்ஷாத்காரத்திற்கு வழி. அப்படி ஒன்றுதலைச் செய்யாதவர்கட்கு பரம்பொருளுடன் ஒன்ற முடியாது.

**விளக்கம்:** பகவானும் உள்ளம் ஒரே பரம்பொருளுடன் ஒன்றுவதை 'உபதேச உந்தியா'ரில் குறிப்பிடுகிறார்.

*திடம்இது பூசை செபமும் தியானம்*
*உடல்வாக்கு உளத்தொழில் உந்தீபற*
*உயர்வாகும் ஒன்றில்ஒன்று உந்தீபற. (4)*

சாதகர்கள் செய்யும் மூன்று படிகளான சாதனைகளில்

-உடல், மனம், வாக்கு மூன்றும் செயல்படுவது பூஜை

-மனமும், வாக்கும் மட்டும் செயல்படுவது ஜபம்

-மற்ற இரண்டையும் தாண்டி மனம் மட்டும் செயல்படுவது தியானம்

இவை மூன்றும் படிப்படியாக ஒன்றை விட ஒன்று உயர்வாகும். இவை மூன்றிலும் உயர்வானது ஒன்றான ஒன்றாம் பரமாத்மாவே. அதில் ஒன்றுவாய் என்கிறார் பகவான். உயர்ந்த தமிழ் நூலான திருமந்திரமும் இதே கருத்தைக் கூறுகிறது:

*மந்திரம் ஆவதும் மாமருந்து ஆவதும்*
*தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்*
*சுந்தரம் ஆவதும் தூய்நெறி யாவதும்*
*எந்தை பிரான்தன் இணையடி தானே.*

*209. நாட்டமில் லாவிடம் நாட்ட மறிந்தபின்*
*மீட்டு விடாது சிவம்.*

**பொருள்:** ஒரு நிலையான தியானப் பொருளன்றி எல்லாவிடத்தும் அலைந்து திரிகின்ற மனத்தை சலனமின்றி இதயத்தில் நிலைநிறுத்தும் ஞானாசிரியன் தன் அருளால் சித்திக்கும்.

*210. பஞ்சமா சத்த மறுப்பவர்க்கு அல்லாஅல்*
*அஞ்சல்என் னாது சிவம்.*

**பொருள்:** ஐந்து இந்திரியங்கள் 'இது வேண்டும்', அது வேண்டும் என்று முரண்டுகொண்டே ஓசைகள் எழுப்பிக் கொண்டே இருக்கும். இந்த இந்திரிய ஈர்ப்புகளை மறுத்து வெற்றி கொண்டவர்களை "நீ அஞ்ச வேண்டிய தேவை இல்லை. நான் உன்னை அழைத்து என்னுடன் ஒன்றிடச் செய்வோம்' என்று சிவம் அழைக்கும்.


# பகவான் ரமணா –
# அருட் பெருங்கடல்

**டாக்டர் வேங்கட். S. ரமணன்**

*சென்னை சின்மயா மிஷனில் 11/6/2023 அன்று நடைபெற்ற ஸ்வாமி சின்மயாநந்தரின் 108ஆவது ஜயந்தி விழாவில் Bhagavan Ramana the Ocean of Grace என்ற தலைப்பில் ரமணாஸ்ரம தலைவர், டாக்டர். வெங்கட் S. ரமணன் நிகழ்த்திய சொற்பொழிவின் தமிழாக்கம்.*

ஸ்ரீ ஸ்வாமி சின்மயாநந்தரின் 108ஆவது ஜயந்தி விழாவினை கொண்டாடும் விதமாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்வாமி சின்மயாநந்தரின் நினைவுச் சொற்பொழிவுத் தொகுப்பில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் சார்பாக என்னை பேச அழைத்ததற்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

இன்று நான் ஸ்வாமி சின்மயாநந்தரின் ஆன்மிக ஒளி திகழும் வாழ்வின் சில பக்கங்களிலிருந்து எனது உரையைத் துவங்க நினைக்கிறேன். அவை ஸ்வாமி தபோவன் மஹராஜ் மற்றும் ஸ்வாமி சின்மயாநந்தர் இருவருக்கும் வெவ்வேறு சமயங்களில் பகவானுடன் நிகழ்ந்த சிறப்பு வாய்ந்த அந்த சந்திப்புகள் ஆகும். அவை நமது பாரத தேசத்தின் ஆன்மிக வடிவினையே மாற்றி புதிய ஆன்மிகப் பாதையை அமைத்தது. பகவான் மீது ஸ்வாமி சின்மயாநந்தர் கொண்டிருந்த பெருமதிப்பு, பகவானின் உபதேசங்களை உலகெங்கும் பரப்ப அவர் கொண்ட முயற்சிகள் அனைத்தையுமே ஒரு தொகுப்புப் பார்வையாக கண்டு பின்னர் பகவானது வாழ்க்கையை அவர் தரும் ஒப்பற்ற உபதேசம் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்வோம்.



இச்சமயம் ஸ்வாமி சின்மயாநந்தருடன் என் வாழ்வில் தொடர்புடைய ஒன்றை இங்கே கூறுகிறேன். அவரைப் போன்றே எனது பிறந்தநாளும் மே எட்டாம் தேதி தான். என் பிறந்தநாளைதொட்டே அவர் மீது நான் கொண்ட பேரன்பும் பெருமதிப்பும் வளர்ந்து கொண்டே வருகிறது. அவர் தமது 'ஹோலி கீதா' நூலின் முகவுரையில் எழுதியுள்ள வாசகம்தான் என்னுள் பதிந்துள்ளது. "ஒரு வாசகன், நூலில் ஒவ்வொரு சொல்லையும் பெருமதிப்புடன் பயின்றாலன்றி அதன் பேரறிவு அவன் உள்ளத்தில் புகாது." என்று அவர் கூறுகிறார்.

ஸ்வாமி தபோவன மகராஜ் மற்றும் ஸ்வாமி சின்மயாநந்தர் இருவருமே தமது மிக இளம் வயதிலேயே பகவானிடம் வந்து, அவரது தெய்வீக ஆசிகளைப் பெற்றவர்கள். பின்னர் இந்த சனாதன தர்மத்தின் தூதுவர்கள், தமது வாழ்நாள் முழுவதும் இந்து சமயத்திற்கு புத்துணர்வு அளித்து, கீதை, மற்றும் உபநிடதங்கள் போன்ற உயர் நூல்களின் உபதேசங்களைப் பரப்புவதிலேயே தம் வாழ்நாள் முழுவதும் கழித்தனர். அவர்கள் போன்று பகவானும் தமது சக்தி ததும்பும் மௌன உபதேசத்தினாலேயே பல்லாயிரக்கணக்கான சாதகர்களையும் ஞானிகளையும் ஆன்மை எழுச்சி பெறச் செய்தார்.

ஸ்வாமி சின்மயாநந்தர் பகவானை முதன் முதலில் சந்தித்தது குறித்து அவர் வாய்மொழியாகவே கேட்போம்: "எனது பள்ளி இறுதித் தேர்வை முடித்த பின் முழு தென்னிந்தியாவிற்கும் பயணம் செய்ய வழிவகுக்கும் ஓர் உள்ளடக்கப் பயண சீட்டுடன், தென்னிந்தியா முழுவதும் நான் பயணம் செய்யத் தொடங்கினேன். ரயில் வண்டி தனது பயணத்தில் ஊர்ந்து செல்லத் துவங்கியது. பயண வழியில் ஓரிடத்தில் பயணிகள் அனைவரும் ரயில் பெட்டியின் சாளரம் வழியே வெளியே பார்க்கத் துவங்கினர். அங்கே தெரிந்த பெரிய ஆலயத்தினை உள்ளிருந்தே வழிபட்டனர்.

'எதைக் காண்கிறீர்கள்' என நான் வினவிய போது அதுதான் பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை ஆலயம் என்று விடை கிடைக்கப் பெற்றேன். அதன்பின் பெட்டியில் அமர்ந்து இருப்பவர்கள் ரமண மகரிஷியைப் பற்றி பேசத் துவங்கினர் 'மகரிஷி' என்ற அந்தச் சொல் என் மனதில் புனிதமானதான வனாந்திரங்கள், அதில் வசிக்கும் தெய்வீக ஒளி வீசும் அமானுஷ்யங்கள் போன்றவைகளை என் மனது சித்தரிக்கத் துவங்கியது. அச்சமயத்தில் நான் நாத்திகக் கொள்கையில் தீவிரமாக அழுந்தி இருந்த போதிலும் அருணாசலத்தைக் கண்டவுடன் அடுத்த புகை வண்டியைப் பிடித்து உடனே திருவண்ணாமலையை நோக்கிப் பயணத்தைத் துவக்கினேன்.

ஆஸ்ரமத்தை அடைந்தவுடன் மகரிஷி ஹாலில் வீற்றிருப்பதாகவும் எவரும் அவரைச் சென்று சந்திக்கலாம் என்றும் கூறப்பட்டது. அங்கே நுழைந்தவுடன் ஒரு கட்டிலின் மீது ஒரு திண்டின் மீது சாய்ந்த வண்ணம், ஒரு கௌபீனம் மட்டும் அணிந்திருந்த ஒரு முதிர்ந்த உருவத்தைக் கண்டேன். அவருக்கு வெகு அருகாமையில் கட்டிலுக்கு அருகில், பக்கத்தில் நான் அமர்ந்தேன். மகரிஷி திடீரென தன் கண்களைத் திறந்து, என் கண்களை நேருக்கு நேராக நோக்கினார். நானும் அவர் விழிகளை நோக்கினேன். அந்த ஒரே ஒரு ஆழ்ந்த பார்வை தான், அந்த ஒரு கண நேரத்தில் மகரிஷி என் உள்ளத்தை ஆழ்ந்து நோக்குகிறார் என்பதை உணர்ந்தேன். அவர் என்னுடைய ஆழமற்ற அறிவுத் தேடல்கள், இறை நம்பிக்கையின்மை, குறைபாடுகள், அச்சங்கள் அனைத்தையுமே இந்த ஒரு கணத்தில் கண்டு கொண்டார் என்பதை உணர்ந்தேன்.

அந்த ஒரு கணத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை நான் விவரிக்க இயலாது. என் உள்ளக் கதவுகள் திறக்கப்பட்டு, தூய்மையாக்கப்பட்டு என் மனோ நோய்கள் குணப்படுத்தப்பட்டு, என் ஆன்மா முழுதுமே வாசனைகளையும் பண்புகளையும் கடந்த வெறுமை நிலையினை அடைந்ததை உணர்ந்தேன்.

*மகரிஷியின் சன்னதியில் சில நிமிடங்களுக்கு முன் நுழைந்த பாலகிருஷ்ணன் என்ற இளைஞனும் பகவான் சந்நிதியில் இருந்து இப்போது வெளிவந்த இளைஞனும் ஒருவன் அல்ல. எனது கல்லூரி நாட்களுக்குப் பின்னர் எனது அரசியல் செயல்பாடுகள், என் குருநாதர், தபோவனம், அவரது திருவடியின் கீழே நான் உத்தர காசியில் பெற்ற ஞானம், கங்கைக் கரையில் நான் பெற்ற அறிதல் அனைத்தும் பல்லாண்டுகளுக்கு முன் திருவண்ணாமலையில் அந்தக் கோடை நாளில், கண நேரத்தில், ஒரு கண் பார்வையில் பெற்ற அதே ஞானம்தான் என்பதைப் பின்னர் உணர்ந்தேன்."*

*1982ஆம் ஆண்டு ஒரு சொற்பொழிவில் ஸ்வாமி கூறினார்: "பகவான் ரமணர் ஒரு விவாதப் பொருள் அல்ல. அவர் ஒரு அனுபவம். அவர் பிரக்ஞை உணர்வின் முழு வெளிப்பாடு. அவரே மிக உயரிய சத்தியம். உலகில் எழுந்த எல்லாத் தத்துவங்களின் சுவைப் பிழிவு. எங்ஙனம் ஒரு ஞானி முற்றிலும் பற்றற்ற நிலையில் வாழ முடியும் என்பதற்கு வெளிப்படையான அத்தாட்சியாக அவர் விளங்கினார். அவர் ஒரு பௌதீக தேகத்தில் அடங்கி இருந்தாலும் எல்லையற்ற தன்மய பேரெழிலுக்கும் தூய்மைக்கும் மொத்த உருவமாய் வாழ்ந்தார்."*

*கீழ்க்கண்ட இரண்டு நிகழ்ச்சிகளும் பூஜ்ய ஸ்வாமிகள், ஸ்ரீ ரமண மகரிஷிகளின் மீது கொண்டிருந்த பெருமதிப்பையும் அதேசமயம் ஸ்வாமிஜி அவர்களின் தன்னடக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.*

*ஒரு பிக்ஷா வந்தன நேரத்தின்போது, ஸ்வாமியிடம் மிகுந்த பக்தி கொண்ட ஒரு சாதகர் ஸ்வாமிஜியைப் புகழ ஆரம்பித்தார். "ஸ்வாமிஜி, உங்களையும் ரமண மகரிஷிகளையும் போன்ற ஞானிகள்..." என்று ஆரம்பித்தவுடன், ஸ்வாமிஜி அவரை இடைமறித்து, "ரமண மகரிஷி போன்ற ஞானிகள் ஞானத்தின் மொத்த உற்பத்தியாளர்கள்; எம்போன்றவர்கள் அவர்கள் உற்பத்தி*

*செய்யும் ஞானப் பொதியினை விநியோகம் செய்யும் சில்லறை வியாபாரிகளே" என்று பெரும் அடக்கத்துடன் கூறினார்.*

*பின்னொரு சமயம், ஸ்வாமிஜியிடம், "நீங்கள் பகவான் மீது இவ்வளவு பெருமதிப்பு கொண்டிருப்பதன் காரணம் என்ன?" என்று வினவியபோது, ஸ்வாமிஜி, "ஏனைய குருமார்கள் கவலையில் உழன்று கொண்டிருக்கும் சாதகர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றனர். பகவானோ பிரச்சனைகளின் அடி வேரையே அழித்து விடுகிறார்" என்றார்.*

*பகவானிடம் தான் பெற்ற அனுபவத்தை தபோவன் மகராஜ் எடுத்துரைக்கின்றார்:*

*"ஏறத்தாழ 35, 40 ஆண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலையில் மகரிஷியின் தரிசனத்தைப் பெறும் பேறு எனக்குக் கிட்டியது. அப்போது அவர் மலை மேல் ஒரு குகையில் தனது அன்னையுடனும் சீடர்களுடன் தங்கியிருந்தார். அப்போது ஓர் இளம் பிரம்மச்சாரி ஆக இருந்த நான், ஒரு நண்பகல் வேளையில், மலை மீது ஏறி குகையை அடைந்து, பகவானைத் தரிசித்தேன். அவருக்கு சமர்ப்பணமாக வாழைப்பழங்களைக் கொண்டு வந்து அவர் முன் வைத்து அமர்ந்தேன்.*

*சிறிது நேரத்தில் பழங்கள் அனைத்தையும் குரங்குகள் வந்து எடுத்துக்கொண்டு சென்று விட்டன. மகரிஷி என்னைக் கனிவுடன் பார்த்தார். அவ்வளவு தான், அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. தலையாய தெய்வீக மௌனம் என்னைச் சூழ்ந்தது. இவ்வாறு ஒரு மணி நேரம் கழிந்தது. உணவு வேலை நெருங்கியபடியால், பகவான் எழுந்திருந்தார். நானும் எழுந்திருந்து பகவானை வணங்கிக் கீழே இறங்கிச் செல்லத் துவங்கினேன்.*

*பகவான் சாந்தி மற்றும் மௌனத்தின் மொத்த உருவமாக அங்கே இருந்தார். அவருடைய சீடர்கள்*

என்று கூறிக் கொள்ளும் அனைவருக்கும் அவரை வணங்குவது மட்டுமின்றி, அந்த தெய்வீக மௌனத்தை தம்முள்ளே கொணர வேண்டும். அந்தத் தெய்வீக மௌனத்தை உள்நாடிச் செல்வது என்பது, 'நான் யார்?' என்னும் ஆத்ம விசார வழியே ஆகும்.

"மனிதா! அந்தத் தூய உள் மௌனத்தை நாடிச்சென்று அதிலேயே கரைவாய். உலகியல் கர்மங்கள் அனைத்தையும் ஆற்றும்பொழுது, அந்த சுத்த மௌனத்தில் ஆழ்வதை மறவாமல் பின்பற்றுக. அந்த சுத்த மௌனத்தை நீ அடைந்து விட்டாயானால் உலக நன்மைக்காக செயலாற்றுவாய். ஒரு சமுத்திரம் தன் அலைக் கரங்களால் நடனமாடிக் கொண்டு இருக்கிறது. அது பரந்து சிலிர்ப்பை வெளிப்படுத்துகிறது. தனது இடி முழக்கம்போன்ற அலை ஓசையால் கர்ஜிக்கிறது. அதேசமயம் தனது அடி ஆழத்தில் மிக்க சாந்தத்துடன் உள்ளது. அதுபோன்றே, இதயத்தின் அடிஆழத்தில் பேரமைதியுடன் இருப்பாய்."

பகவானின் உபதேச கருத்துக்களான 'உபதேச சாரம்', 'சத்தர்ஸனம்' போன்றவற்றை சின்மயா மிஷன் கேந்திரங்கள் அனைத்தின் மூலமாகப் பரப்புவதற்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறான பகவானைப் பற்றிய சொற்பொழிவுகளை கேட்டும் நூல்களைப் பயின்றும் பகவான் திருவடிகளில் பலர் வந்து சேர்ந்துள்ளனர். முக்குளித்த சாதகர் பலர், சின்மயா மிஷனில் அங்கத்தினர்களாக உள்ளனர். இந்த இரண்டு அமைப்புகளுமே ஞான மார்க்கத்தை எடுத்துக் கூறுவதால் இரண்டிற்கும் இடையே ஓர் இயற்கையான சங்கமம் நிகழ்கிறது.

சம்சாரக் கடலைக் கடக்க விரும்பும் முமூக்ஷுக்கள் அனைவரும் இந்த இரண்டு அமைப்புகளுக்கும் செல்கின்றனர். உலகளாவிய சனாதன தர்ம மறு மலர்ச்சிக்கும், இந்தியாவின் ஆன்மிக எழுச்சிக்கும் ஸ்வாமி

*சின்மயாநந்தர் ஒரு பெரும் சக்தி வாய்ந்த தூண்டுகோலாய்த் திகழ்ந்து, சனாதன தர்மத்தின் ஆத்மிக நூல்களையும், இந்து தர்மத்தின் தலையாய அடிப்படைக் கொள்கைகளையும் பாரதம் மற்றும் அகிலம் முழுவதும் தமது ஆங்கிலச் சொற்பொழிவுகளால் பரப்பினார். அவருடைய எளிய அதேசமயம் அடிப்படையான தொலைநோக்குப் பண்பே 'இந்துக்களை இந்துக்களாக மாற்றுதல்' என்பதாம்.*

*ஸ்ரீ ரமண மகரிஷியின் உபதேசங்களை உலகளாவிய வகையில் பரப்புவதற்காக 1952இல் பம்பாயில் துவங்கப்பட்ட 'கால் டிவைன்' சஞ்சிகையின் இணை ஆசிரியராகப் பொறுப்பேற்று பல்வேறு கட்டுரைகளை அந்த சஞ்சிகையில் எழுதியதற்காக ரமணாஸ்ரமம் சார்ந்தோராகிய நாம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டு உள்ளோம்.*

*அவரது சொற்பொழிவுகள் மிகுந்த உற்சாகம் ஊட்டுவதாகவும் ஊக்கம் அளிப்பதாகவும் சக்தி அளிப்பதாகவும் அமைந்துள்ளன. அவரது ஹாஸ்ய உணர்வு புகழ் பெற்றது. அருணாசல மலைச்சாரலில் ஏற்பட்ட ஞான தீபம் உலகமுழுவதம் ஒளிபரப்பும் பெரும் ஆன்மிக அறிவின் சுடரொளியாய் மலர்ந்தது.*

*இப்போது நான் இந்தத் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 'பகவான் ரமணர் – அருட் பெருங்கடல்' என்பது குறித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.*

*பகவான் ரமணர் 24 மணி நேரமும் யாவரும் –மனிதர் மட்டுமன்றி பறவைகளும், விலங்குகளும் – எளிதல் அணுகக் கூடியவராக விளங்கினார். அவரைச் சந்திக்க எவருடைய அனுமதியும் தேவையில்லை. விசேஷ தரிசனம் போன்ற எதுவுமே அவர் முன்னிலையில் இல்லை.*

*உறங்கும் இரவு வேளையில்கூட கூடத்தில் அவரது கட்டிலைச் சூழ்ந்து அன்பர்கள் உறங்குவர். இரவு*

*நேரங்களில் எவரேனும் வெளியே செல்ல நேர்ந்தால், டார்ச் விளக்கின் ஒளி வட்டத்தை வெளியே காண்பிக்காது, தன் வயிற்றின் மீதே காண்பித்து அந்த பிரதிபலிக்கும் ஒளியிலேயே வெளியே செல்வார். நாய்கள் ஏதேனும் இயற்கை உபாதையைக் கழிக்க வேண்டி நேர்ந்தால் அவற்றையும் வெளியே அழைத்துச் செல்வார்.*

*அவர் ஒரு தனித்துவமான குரு. பக்தர்தம் சேவையை எதிர்பாராது, தாமே அவர்கட்கு சேவை செய்தவர் பகவான்.*

*அதிகாலை 2 மணிக்கெல்லாம் எழுந்து காய்கறிகளை நறுக்கவும், காலைச் சிற்றுண்டி தயாரிப்பில் உதவவும் தொடங்கிவிடுவார் பகவான். அச்சமயங்களில் சமையல் அறையில் பணியாற்ற முன் வந்தவர்களில் பலர் சிறுவயதிலேயே கணவனை இழந்தவர்கள். அதிகாலை சமையல் வேலைகட்கு இடையே பகவான் அவர்கட்கு மிக உயர்ந்த வேதாந்த உண்மைகளை எளிமையாக இவ்வாறு போதிப்பார்: "காய்கறிகளை நீங்கள் சமைக்கும்போது அவற்றை மூடி வைக்க வேண்டும் அப்போதுதான் அவை தமது சுவையை இழக்காது. உண்ணத் தகுதியாக அமையும். அதே போன்றுதான் மனதும். பக்குவப் படுத்தும்போது, அதன்மேல் ஒரு மூடியைப் போட்டு மூடி, மெதுவாகப் பக்குவம் அடையச் செய்யுங்கள். அப்போதுதான் மனது நன்றாகப் பக்குவம் அடைந்து இறைவனுடன் ஒன்றுபடும் தகுதியை அடைகிறது."*

*ஒரு கவிஞர் கூறியது போல், சூரியாஸ்தமனத்தால் ஒளியின் எழில் பாங்காக அமைவதுபோல், மகத்துவம் அவர்மீது அமர்ந்து இருந்தது. அவ்வொளியையும் மகத்துவமும் ஏனையோர்மீது ஏற்படுத்திய தாக்கம் ஒப்புயர்வற்றது. எப்படி எல்லாம் நாம் ஒரு மஹான் இருப்பார் என்று எதிர்பார்க்கிறோமோ அதற்கு நேர்மாறாக ஒரு தலை அசைப்பிலேயே அவற்றுக்கு எல்லாம் மறுதலித்து விடுகிறார் பகவான்.*

பார்க்கப்போனால் பகவான் கல்வியை முறையாகக் கற்றவர் அல்லர் ஆயினும் கற்றோர் தமது ஐயங்களை நிவர்த்தி செய்து கொள்ள அவரிடம் சென்றனர். அவர் தாமாக முன்வந்து எதையுமே எழுதியதில்லை. ஏனையோர் வேண்டுகோளுக்கிணங்க அவர் எழுதியவை பல நூல் பக்கங்களை நிரப்பின. அவரது தாய்மொழி தமிழ். ஆயினும் மனங்கவரும் பல பாடல்களைத் தமிழில் மட்டுமன்றி சம்ஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு போன்ற பிற மொழிகளிலும் யாத்தார். இந்த மொழிகளில் பெரும் பாண்டித்யம் வாய்ந்த அறிஞர் பலர் பகவானது கவிதைகளின் மகத்துவத்தை வியந்து பாராட்டி உள்ளனர்.

பகவானது நகைச்சுவையுணர்வும் மிகப் பிரசித்தி பெற்றது. ஒருமுறை அவர் முன்னர் பயின்ற பள்ளி ஆசிரியர் ஒருவர் அவரைச் சந்திக்க வந்தபோது, பகவான் அவரிடம் தமது கவிதைகளில் ஒன்றைக் காண்பித்தார். அதனைக் கண்டு மிகவும் மகிழ்ந்த ஆசிரியர், அந்த நூலில் உள்ள பகவானின் பல்வேறு பாடல்களைக் குறித்த விளக்கங்களைக் கேட்டு ஆரம்பித்தார். பகவான், உடனே, "மதுரையில் பள்ளியில் பயிலும்போது இவர் கேட்கும் கேள்விகட்கு பயந்துதான் நான் ஊரை விட்டே ஓடி வந்து விட்டேன். இவரோ என்னை இங்கும் விடாமல் துரத்திக் கேள்வி கேட்கிறாரே" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

பகவான் பெரும்பாலான சமயங்களில் மௌனமாகவே இருந்து, மௌனத்தின் மூலமாகவே கேட்போர் ஐயங்களைத் தீர்த்து வைத்தார். அவரது ஆழ்ந்த மௌனத்தின் வெளிப்பாடு அவரது மௌனம். ப்ரக்ஞை உணர்வின் மொழி அவர்.

தத்துவ முரண்பாடுகளில் பிரசித்தி பெற்ற ஒன்று தன்னுடைய உயிரை அர்ப்பணிப்பவன் அதனை மீட்டுக் கொள்கிறான். தன்னுடைய தன்முனைப்பை அர்ப்பணிப்பவன் ஏனையோரைக்

காட்டிலும் தனித்துவம் அடைகிறான். ஒரு ஜீவன் முக்தன் தன்னுடைய தன்முனைப்பை முற்றிலும் கரைத்து விடுகிறான். இந்த தன்முனைப்பு அல்லது அஹங்காரம்தான் ஒருவனது மனத்தைத் தவறான வழியில் மடைமாற்றி அவனை வக்கிரபுத்தி உடையோன் ஆக்கி விடுகிறது. ஜீவன் முக்தன் தனது தன்முனைப்பை அழித்தபின் அவனது மெய்ஞ்ஞான பண்புகள் நேர்வழியில் வளர்ந்து வக்கிரம் ஏதும் இன்றி எல்லோரைக் காட்டிலும் சிறப்பாக ஒளிர்கின்றன.

பகவான் மிகவும் உன்னிப்பான கவனத்தை உடையவர். அனைத்தையும் கூர்ந்து கவனிப்பார். சரியான செயல்முறை சார்ந்து செயல்படுபவர். அவர் இருக்கும் இடத்தில் அனைத்துமே ஒழுங்காக நடைபெறும். புத்தகங்கள் அனைத்தும் அவற்றிற்கு உரிய இடங்களில் வைக்கப்பட்டு இருக்கும். கட்டில்கள் மேல் போர்த்தப்பட்டுள்ள விரிப்புகள் மிகவும் சுத்தமாக இருக்கும். அவை ஒழுங்காக மடிக்கப்பட்டு இருக்கும். ஆஸ்ரம கூடங்கள் ஒருநாளைக்குப் பல தடவை பெருக்கப்பட்டு மிகவும் சுத்தமாக இருக்கும். அவர் உடுத்திய ஒரே ஆடையான கௌபீனம்கூட மிகவும் தூய்மையாக இருக்கும். கூடத்தில் இருந்த இரண்டு சுவர்க் கடிகாரங்களும் சரியாக ஒரே நேரத்தைக் காண்பிக்கும்.

பகவான் மிகவும் அன்பானவர். அனைவருக்கும் உரிய மரியாதை அளிப்பவர். வழக்கமான குருமார்கள் போன்று தான் தனிப்பட்டு உயர்ந்தவர் என்பதை வெளிக் காட்டாதவர். அவர் பேச்சில் எப்போதும் உற்சாகம் ததும்பும். அவரது உற்சாகமும் ஆனந்தமும் தமிழ் சிறிதும் அறியாதவர்களைக் கூடத் தொற்றிக் கொள்ளும். அதேசமயம் அது வெறும் நகைச்சுவை அல்லாது, ஆழ்ந்த தத்துவப் பொருளையும் கொண்டிருக்கும்.

அவரது வதனத்தின் வெளிப்பாடுகள் மாறிக் கொண்டே இருந்தாலும் தூய நீரைப் போன்று

மாறாததாகவே இருக்கும். அவரது ஒளி வீசும் கண்களில் பேரன்பு சுடர்விடும்.

மக்கள்மீது, பிற உயிரினங்கள்மீதும் அவர் காட்டிய கருணை உயிரற்ற பொருட்கள் மீதும் படர்ந்தது. எல்லாச் செயல்களும் ஒரு நோக்கத்தைக் கருதியே செயலாற்றப்பட்டன. எந்த ஒரு சிறு பொருளும்கூட வீணாக்கப்படவில்லை. நூல்கள் மிகுந்த கவனத்துடன் கட்டமைக்கப்பட்டன. அவர் உண்ட இலையில் ஒரு சாதப் பருக்கைகூட வீணாக்கப்பட்டு இருக்காது.

பகவான் ரமணர் ஒரு புதிய சமயக் கொள்கையை உருவாக்கவோ, இருக்கின்ற சமயங்களில் ஒரு கண்டிப்பான நடைமுறையை ஏற்படுத்தவோ அவதரிக்க வில்லை. தான் தோன்றிய சமயத்தில் உலகில் நிலை பெற்றிருந்த நிலவரத்திற்கு ஏற்றவாறு ஒரு புதுவழி காட்டவே வந்தவர்.

அவர் காட்டிய நேர்வழி அத்வைத வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட விசார மார்க்கம். அதனைப் பின்பற்ற எந்தவிதமான சடங்குகளையோ அநுஷ்டானங்களையோ கடைப்பிடிக்கத் தேவையில்லை. அதற்கு ஒரு பூசாரியோ, வெளிப்படைக் குறியீடுகளோ விசேஷ ஆசாரங்களோ தேவையில்லை. அதைப் பின்பற்றுபவர்கள் எங்கே இருக்கிறார்களோ, ஒரு தொழிற்சாலையிலோ, சமையல் அறையிலோ அலுவலகத்திலோ - அங்கேயே, ஒரு ஆஸ்ரமத்தில் இருப்பது போலவே பின்பற்ற முடியும். அதைப் பின்பற்ற பெரிய தத்துவ மூட்டையைச் சுமக்க வேண்டியதில்லை.

இதன் ஒரே தேவை தன்முனைப்பைத் தாண்டிச் செல்வதே. ஆத்மா ஒன்று மட்டுமே இருந்தது; இருக்கின்றது; இருக்கப் போவது. அதுவே நமது ப்ரக்ஞை உணர்வில் நிரந்தரமாக நிலை பெற்றுள்ளது. இந்த உலகக் காட்சிகள் அனைத்தும் அதன் வெளிப்பாடுகளே. நாம் பொய்ம்மையை பொய்மை

என்று உணர்ந்தாலே போதும். மெய்ம்மை தானே வெளிப்பட்டு ஒளிரும். இங்கு ஏதோ ஓர் ஆத்மா மற்றொரு ஆத்மாவைத் தேடிக் கண்டு பிடிப்பதில்லை. இது தானே தானாக இருந்து, விழிப்புணர்வை உள்ளிருந்து எழுப்பி அதுவே தான் என உணர்வதே.

அறிவது என்பது அதுவாகவே இருப்பதாகும். பகவான் நாம் தியானிக்கும்போது நமது ப்ரக்ஞையை மார்பின் வலப்புறம் அதிரும் ஆத்ம ஹ்ருதயத்தில் நிறுத்தி ஒரே உண்முக நோக்குடன் தியானிக்கச் சொல்கிறார்.

இந்த தியானம், 'நான்-நான்' என்னும் விழிப்புணர்வை, 'தானே தானே தத்துவம்?' என்பதை இதயத்தில் விழித்து எழச் செய்கிறது. இந்த 'நான்' என்னும் இருப்புணர்வு அகந்தையின்பால் பட்டதல்ல. பரமார்த்திக உணர்வான அண்டம் அளாவிய 'நான்' என்னும் உணர்வே. அது நாம் இடைவிடாமல் உண்முக நோக்கான விசார யோகத்தினை அப்யசிக்கும்போது நம் வாழ்வின் ஒவ்வொரு துகளிலும் இந்த விழிப்புணர்வு இடம் பெற்று விடுகிறது. இந்த விழிப்புணர்வு மிகவும் விரிவடைந்து, எல்லா அறிவையும் தாண்டி, தன்முனைப்பு என்பதை முற்றிலும் விழுங்கி ஜீரணித்து 'நான் ப்ரம்மமே' என்ற ஞானத்தில் நிரந்தரமாகத் திளைக்கின்றது.

பகவானின் இந்த ப்ரம்மாஸ்திரம் – "எங்கிருந்து இந்த எண்ணம் எழுகிறது? ஏன் இது எழுகிறது? யாருக்கு எழுகிறது?" என்ற ஆத்ம விசாரம், 'நான் யார்?' என்ற அடிப்படைக் கேள்விக்கு மனதைத் திருப்பி விடுகிறது. இந்தக் கேள்விக்கு மனது வாயிலாகவோ, சொற்களின் வாயிலாகவோ விடை ஏதும் இல்லை. நாம் செய்ய வேண்டியது எல்லாம், 'சும்மா இரு' என்ற உபதேசத்தினைப் பின்பற்றித் தன்னில் தானே அடங்கி இருப்பதே.

இது நேர்ந்தவுடன், நாம் நமது எல்லாச் செயல்களையும் ‘கர்த்ருத்தவ பாவம்’ – ‘நான் செய்கிறேன்’ என்னும் எண்ணத்தை நீத்து, ஆத்மாவே எல்லாவற்றிற்கும் அதிகாரி என்ற உணர்வுடன் செயல்படலாம். விசாரத்தின் மூலம் பேராசை, கோபம், க்ரோதம், லோபம் அனைத்தையும் வெற்றி கொள்ள முடியும். பகவான் எவரையுமே உலகவாழ்வை நீங்கி வந்து விடு என அறிவுறுத்தவில்லை. ‘நான்தான் செய்கிறேன்’ என்ற கர்த்ருத்வ பாவத்தை நீத்து, ‘நான்-நான்’ என்ற இருப்புணர்வில் மாத்திரமே விசாரத்தின் மூலம் மனத்தை நிறுத்தினால் உலகின் எந்த மூலையிலும் ஒருவன் வாழ முடியும். உண்முக நோக்கினால் மட்டுமே ஒருவன் ஆத்மாவின் உள்ளார்ந்த ஆத்ம ஏகாந்தத்தில் வாழ முடியும். இந்த அனுபவம் ஞானத்தின் மூலம் பேரானந்தத்தை எழுப்புகிறது.

முடிவாகக் கூறுமிடத்து, ஸ்வாமி சின்மயாநந்தர் அத்வைத ஞானத்தின் இடி முழக்கத்தை உலகம் முழுவதும் ஒலிக்கச் செய்த ஒரு மாபெரும் சக்தி மையம் பகவான் ரமணரோ மிக மென்மையான உருவமற்ற பேரருளின் உருவகம். அவரே அத்வைத வேதாந்தத்தின் மொத்த உருவம். இந்த இரு மஹா குருமார்களும் இன்றும் தொடரும் பல்வேறு யுகங்களுக்கும் பிறப்பு இறப்பு தொடரை முறிக்க முயலும் முமூக்ஷுக்களுக்கு தொடர்ந்து வழிகாட்ட வந்த அவதார புருஷர்கள்.

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

### மூலம்: மௌனி சாது

### தமிழாக்கம்: ராம்மோஹறன்

## 29. திவ்ய தீர்த்த ப்ரோக்ஷணமும் ஆத்ம சுத்தியும்

*"திவ்ய தீர்த்தத்தால் எனக்கு ப்ரோக்ஷணம் செய்யுங்கள்; இந்தத் தீர்த்தத்தில் நான் நனைந்தவுடன் பனியினும் தூய்மை அடைவேன்."*

முப்பது ஆண்டுகள் பகவான் இந்தியாவின் பெரும்பாலும் யாரும் அறிந்திராத ஒரு சிற்றூரின் ஒரு மூலையில் தனது 'ஆன்மிக அலுவலகத்தை' நடத்திக் கொண்டு இருந்தார். ஆன்மிகப் பேருண்மைகளை அவர் தெள்ளத் தெளிவாக உணர்ந்து இருந்தார். எனினும் அவர் இந்தப் பேருண்மைகளை பிரசங்கங்களின் மூலமோ அன்றி கூட்டங்கள் மூலமோ அறிவிக்க முற்படவில்லை. அவரது சாந்நித்யமே உபதேசங்களை அறிவிக்கும் வாயிலாக இருந்தது. நட்ட நடுக்கடலில் பத்திரமான துறைமுகத்தைத் தேடித் தவிக்கும் பயணிகட்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் காட்டும் ஒளிபோன்று, பகவான் போன்ற பராதம் சார்ந்த மஹரிஷிகள், அறியும் கண் உடையவர்கட்கும் கேட்கும் செவிகளை உடையவர்க்கும் ஞான ஒளி நல்குகின்றனர்.

ஒவ்வொரு நாளும், ஆண்டு முழுவதிலுமே இந்த ஆச்ரமத்தை விட்டு நீங்காமல் தன்னை நாடி வருவோர்க்கு எல்லாம் வழிகாட்ட ஆயத்தமாய்

அமர்ந்து இருக்கிறார். மிக உயர்ந்த ஆன்மிக வெற்றியை அடைந்துள்ள ஒருவரால் மட்டுமே, தன்வசம் கொண்டுள்ள ஒருவரால் மட்டுமே வழங்கக் கூடிய பேரமைதியையும், சந்துஷ்டியையும் அவர் தன் வசம் கொண்டுள்ளார்.

நான் கண்டறியாத வெகுதொலைவில் ஓர் உயர்ந்த பர்வதத்தில் தோன்றிப் பெருகி வரும் ஒரு நதிபோன்று இந்த எண்ண அலைகள் என் மனதில் தளும்பி ஓடுகின்றன. சில நாட்களுக்கு முன்பு என்றால் "எங்கிருந்து இத்தகைய உயரிய எண்ணங்கள் எனதுள் எழுகின்றன" என்று நான் கண்டுபிடிக்க முயன்று இருப்பேன். இப்போது அதற்கு ஒரு தேவையும் இல்லை.

ஒரு பேரொளியின் ஆழ்மூலத்திற்கு நேர் எதிராகவே ஒருவன் நின்றுகொண்டு இருக்கும் போது அதை ஏன் எங்கோ போய்த் தேட வேண்டும்? இந்தப் பேரொளி நம்முள் புகுந்து ஊடுருவி, நம்முடைய அஹங்காரம் ஏற்படுத்திய எல்லாத் தவறுகளையும், மாறுபாடுகளுக்கு அது காரணம் என்று உணர வைத்து நம்முடைய பொருளற்ற அனுமாத்ரமான உருவத்தை உணர வைக்கிறது. மூலப்பொருளின் ஒளிக்கிரணங்கள் ஒன்றிலிருந்து வெளிப்பட்டு நமது ஆத்மாவை ஊடுருவி உணரச் செய்கின்றன. இந்த மெய்ப்பொருள் அறிவு வெளியில் இருந்து வருவதல்ல. அது நம் ஆத்மாவின் உள்ளிருந்தே ஊடுருவுகின்றது. எனவே, வெளிப்பொருள் ஒன்றின் பாதிப்பினால் ஏற்படும் மாயத் தோற்றம் இது என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்தத் துவக்கத்தில் இருந்து, நம் முன்னே ஒளிரும் உயிரோட்டமான உதாரண புருஷனைத் தியானிப்பதால் தூய்மை அடையத் துவங்குகிறது.

என் ஆரம்பகால வாழ்க்கையில் என்னுள்ளே ஒருவர் கொண்டு இருப்பதாகத் தோன்றிய தவறுகளும், 'பாவ எண்ணங்களும்' இப்போது பொருளற்ற முரண்பாடுகள்



ஆகவும், எப்போதும் நடக்க இயலாதது ஆகவும் மாறிவிட்டதை உணர்ந்தேன். முன்னே அடிக்கடி தோன்றி என் உள்ளத்தே தொல்லைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்திக்கொண்டு இருந்த மனநிலை மாற்றங்கள், இப்போது முற்றிலும் மூடுபனி நிறைவதுபோல் கரைந்து போயின. எல்லா மனிதரிடத்தும் தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை தொடர்ந்து வரும் நிலையற்ற தன்மை மறைந்து ஒழிவதைக் காண்கிறேன். எல்லா விதமான தத்துவங்களுக்கும், சமயச் சடங்குகட்கும், பல்வேறு அமைப்புகளில் அங்கு வகிப்பதற்கும், தம்போலவே அறிவு குறைந்த பிற மனிதரால் வழிநடத்தப் படுவதற்கு அடிப்படையாய் வந்த இந்த நிலையற்ற தன்மை என்னுடைய ப்ரக்ஞை உணர்விலிருந்து மெதுவாக நீங்கி, என்னுள் ஒரு புதிய விடியல் எழுவதையும் காண்கிறேன்.

*ஒவ்வொரு நாளும், என்னால் முடிந்தவரை ஒவ்வொரு மணித்துளியும் நான் பகவானின் திருவடி நிழலிலேயே அமர்ந்து இருக்கிறேன். என்னுள் நிகழ்ந்து கொண்டு இருக்கும் மறுமலர்ச்சியை ஆய்வதற்கு எனக்கு நேரமோ விருப்பமோ இல்லை. என்னுள் நிகழ்வது 'இப்படித்தான் நிகழ வேண்டும்' என்று வரையறுக்கப் பட்டுள்ளது என்பதை நான் அறிவேன். நான் எதை விட்டு நீங்கி வந்தேனோ அந்தப் பொய்யினை உலகின் காரணிகள் என்னை மீண்டும் தம்மை நோக்கி இழுத்து என்னை வழிதவறச் செய்ய முயல்கின்றன என்பதையும் இந்த மாய உலகம் சிருஷ்டிக்கும் எல்லாத் தடைகளுடனும் போராடி வெற்றி கொள்ள வேண்டும் என்பதையும் நான் அறிவேன். அதேசமயம், இந்த வெளி உலக ஈர்ப்புகள் அனைத்துமே நமது ராஜபாட்டையில் இல்லாத தவறான சந்துபொந்துகள் என்று அறிந்தபிறகு, அவற்றிற்கு மீண்டு செல்லும் சாத்யக் கூறுகள் இல்லை. என் அந்தரங்கத்தில் சிறிதளவு இதனால் அதிருப்தி இருக்கலாம். ஏனெனில் தான் முன்னர் முற்றிலும் அதிகாரம் செலுத்தி வந்த பௌதிக சாம்ராஜ்யத்தில் இப்போது சிறிதும் பங்கேற்காமல், அமைதி காக்க வேண்டி உள்ளதல்லவா!*

*'ஸ்வர்கலோகத்தைத்' தேடும் இன்பம் கனாக் கண்களை மூடுகின்ற முக்தி எண்ணம், இப்போது பொருளற்றதாய்த் தோன்றுகிறது. உண்மையான முக்தி என்பது முக்தியைத் தேடுகின்ற ஒன்று காணாமல் கரையும்போது சித்திக்கிறது.*

*இதைத் தொடர்ந்து தன்னை மற்றவருடன் ஒப்பிடும் விபரீதமான மன நஞ்சும் அழிகிறது. பின்னர் ஆதிகாலம் தொடர்ந்து உலகோர்க்கு ஆன்மோபதேசம் செய்துவந்த பல்வேறு லோக குருக்களின் பல்வேறு தேச, காலம் பொன்றுரைகள் என் ஊனக்கண் முன் விரிகின்றன.*

*மஹாத்மாக்கள் பல்வேறு யுகங்களாய் 'அனைத்தும் ஒரே பரம்பொருளால் ஊடுருவப் பட்டுள்ளது' என்ற*

இந்த உபதேசத்தை உலகில் உணரவில்லை. இந்தப் பரந்த உபதேசத்திற்கு என் குறுகிய பொருளைக் கற்பித்துக் கொள்கிறது. தன்னுடைய சுயநல சௌகர்யங்களுக்காகவும், எல்லா சுய முன்னேற்ற முயற்சிகளையும் தவிர்ப்பதற்காகவுமா?

ஒருமுறை பகவானிடம் "உலகின் மிகப் பெரிய சமயங்களில் ஒன்று (கிறிஸ்துவம்) கூறும் 'முதற் பாவம்' என்பது என்ன என்று வினவியபோது அவர் 'நான்' என்பது ஒரு தனிப்பட்ட வ்யக்தி என்று எண்ணுவதே" என்றார்.

'தான்' என்பது ஒரு தனிப்பட்ட ஜீவாத்மா என்று எண்ணம் கொள்வதே உலகில் காணும் எல்லாத் தவறுகட்கும், கஷ்டங்களுக்கும் மூல காரணம். பார்க்கப் போனால், தன்னைத்தானே 'நான் ஒரு தனிப்பட்ட ஜீவன்' என்றும் பொய்ம்மைக் கூட்டில் சிக்கிக் கொண்டு வாழ்வதால் என்ன பயன்? மனதுடைய தலைமைக் கடமை ஆரம்பத்திலிருந்தே பொய்ம்மையின் சிருஷ்டியான 'நான்' என்பதை ஞானவாள் கொண்டு அழிப்பதே.

பல்வேறு சமயங்களில் எழுந்த எனது எண்ணச் சிதறல்களை ஓரிடத்தில் கொணர்ந்து எழுத்து வடிவம் கொடுப்பது என்பது, அவை உண்மையிலேயே நிகழ்ந்த அனுபவத்திற்கு ஆன நேர அளவையைக் காட்டிலும் அதிக நேரம் எடுப்பதைக் காண்கிறேன். இது ஒரு திரைப்படம் எடுப்பதை ஒத்திருப்பது போலாகும். தனிப்பட்ட சீன்களையும், நிகழ்ச்சிகளையும் திரைச் சுருளில் படம் எடுப்பதற்கு சில கணங்களோ மணித்துளிகளோ மட்டுமே தேவைப்படும். அதேசமயம் அதே திரைப்படத்தை சிந்தனையில் உருவாக்கி முடிப்பதற்கு பல மணிநேரம் தேவைப்படுகிறது. என்னுடைய அடுத்த எண்ணம் "எதற்காக இந்தத் திரைப்படத்தைப் பார்க்க வேண்டும்?" என்பதே.

★★★★★

இன்று மாலை தியானம் முடித்து தியானக் கூடத்தை நீங்கி ஆலயத்தைக் கடந்து ஆச்ரம சுற்றுச் சுவரையும் கடந்து நெடுஞ்சாலைக்கு வந்து விட்டேன். என் தலைக்கு மேலே அளவு கடந்து விரிந்த ஆகாய வெளியில் எண்ணற்ற அண்டங்கள் சிதறிக் கிடக்கின்றன. எப்போதும் மாறுதல் அடையாது எப்போதும் வெகு தொலைவிலும், அதேசமயம் மிக அருகாமையிலும் பூமியை நோக்கியபடி அவை ஒளிர்கின்றன. இந்தப் பரந்த ஆகாய வெளி முதன்முதலில் நான் கண்டபோது என்னுள்ளே ஒரு வெறுமை உணர்வை ஏற்படுத்தியதுபோல் இப்போது ஏற்படுத்தவில்லை. நாம் நம்முடைய நிரந்தரமில்லா பௌதிகத் தோற்றம் கொண்டே அனைத்தையும் அளவிட முற்படுவது, நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட மாயை உணர்வால் உருவாக்கப் படுவதே. நமது பௌதிக உடலும் மெய்யானது என்ற தவறான கருத்து நீங்கும்போது இந்த அண்டம் முழுவதுமே ஒளியும், நிழல்களும் ஒன்றிணைந்த உருவெளித் தோற்றத்தால் உருவாக்கப் படுவதைப் போன்றதே என்ற உண்மை தெளிவாகிறது.

## சுகத்தின் சொரூபம்

பக்தர்: சுகத்தின் சொரூபம் என்னவென்று வினவினார் பக்தர் ஒருவர்.

பகவான்: சுகம் வெளி வஸ்துக்களிலிருந்து வருவதானால் அவை அதிகம் ஆக ஆக அதிகமாக போகவேண்டும். குறையக் குறையக் குறைந்து போக வேண்டும். ஒன்றுமே இல்லாத போது சுகமும் இல்லாது போய் விட வேண்டும். நம் அனுபவம் எப்படி என்று பார்ப்போம். தூக்கத்திலே வெளி வஸ்துக்கள் ஒன்றும் இல்லை. உடம்பும்கூட இல்லை. ஆனால், அப்போது ஒருவரும் கஷ்டப்படுவதில்லை, ஆனந்தமாகவே இருக்கிறோம். அதனால் நாம் நன்றாக தூங்க விரும்புகிறோம். ஆகவே, சுகம் நமது சுபாவம். வெளியிலிருந்து வருவதில்லை. துக்கம் இல்லாமல் எப்போதும் ஆனந்தமாகவே இருக்க வேண்டுமென்றால் நம் யதார்த்த சொரூபத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

- ஸ்ரீ பகவத் வசனாம்ருதம் நூலிலிருந்து

# பயணக் கட்டுரை

## அச்சுததாசர் மடம், கீழ்வல்லம்

திருவண்ணாமலைக்கு அருகே உள்ள சிறிய ஊர் போளூர். மிகுந்த வளமான பூமியாக இல்லாவிட்டாலும் விவசாயத்தையே நம்பி அங்குள்ள மக்கள் வாழ்ந்து வந்தனர்.

அவ்வூரில் ஏறத்தாழ 1850ஆம் ஆண்டு பலிஜா நாயுடு சமூகத்தைச் சேர்ந்த நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் அச்சுததாசர். அவரது இயற்பெயர் அப்பாய் நாயுடு. இளமையிலேயே தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். பள்ளியில் சேரும்போது, அவரைவிடச் சிறியவர்களுடன் படிக்க நேரிட்டது. தனது புத்திக்கூர்மையால் ஆசிரியர்களை வியக்க வைத்தார். அவரது தாய்மொழியான தெலுங்கு மட்டுமின்றி தமிழிலும் மிகுந்த தேர்ச்சி பெற்று விளங்கினார். அவர் நேர்மையுடன் நன்னடத்தை கொண்ட இளைஞராக மட்டுமன்றி, மிகுந்த ராமபக்தி கொண்டவராக வளர்ந்தார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன்மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற அவரது தாயார், பேரானந்தத்தில் மூழ்கித் திளைத்த துறவியாக அவரைக் காணும் பாக்கியம் பெறவில்லை. அவரது இளமைப் பருவத்திலேயே தாயாரும் காலமானார். தாயன்பு மிக்க அப்பாய் நாயுடுவால் அன்னையின் இழப்பைத் தாங்க முடியவில்லை. இருப்பினும் காலம்


அவரது மனப்புண்ணை ஆற்றியது. போளூரில் பள்ளி ஆசிரியராகச் சேர்ந்து சொற்ப சம்பளத்தில் வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்தினார்.

இக்காலகட்டத்தில் அவர் பண்டிதர்களையும், புலவர் களையும் சந்தித்து, இலக்கிய. இலக்கணங்களைக் கற்கத் தனது புலமையை வளர்த்துக் கொண்டார். சம்ஸ்கிருத மொழியிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றார். இசையில் மிகுந்த புலமை பெற்ற அவர், ஆசிரியப் பணியினை உதறிவிட்டு, பஜனை மந்திரம் ஒன்றை நிறுவி, அங்கு ராமர் சிலையைப் பிரதிஷ்டை செய்து பஜனை செய்து வந்தார். ஸ்ரீராமர்மீது நூற்றுக்கணக்கான ஸ்தோத்திரங்களையும், கீர்த்தனைகளையும் இயற்றினார். பிரகலாத, துருவ, சக்குபாய் சரித்திரங்களை எழுதினார். அவரது இசைச் சொற்பொழிவுகள் கேட்போரது இதயங்களைக் கொள்ளை கொண்டது.

அக்காலத்தில் வேலூர் கஸ்பாவைச் சேர்ந்த வேங்கடகிருஷ்ணதாசர் என்னும் கற்றறிந்த வைணவப் பெரியோர், தனது ஆழ்ந்த பக்தியால் கவிதையில் புலமை பெற்று விளங்கினார். அவரைப் பார்க்க ஆவலுற்று அங்குச் சென்று அவருடன் சிலநாட்கள் தங்கினார்.

அவர்களுக் கிடையேயான சம்பாஷணைகளின் போது அப்பாய் நாயுடுவின் தூய இதயம், தெளிந்த அறிவு, பிரகாசமான தோற்றம், கவிப்புலமை மற்றும் ராம பக்தியைக் கவனித்துவந்த வேங்கட கிருஷ்ணதாசர் அவருக்கு அச்சுததாசர் என்ற பெயரை அளித்தார். அருட்பெயரைப் பெற்ற அப்பாய், வேங்கட கிருஷ்ண தாசரின் ஆசியைப் பெற்று, தயக்கத்துடன் அவரிடம் விடைபெற்று போளூர் வந்தடைந்து தனது இயல்பு வாழ்க்கையைத் தொடங்கினார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரது மதிப்புக்குரிய சில உறவினர்களின் வேண்டுகோளின்பேரில், அவரது சமூகத்தைச் சேர்ந்த, கஸ்தம்பாடியில் நற்குடும்பத்தில்



பிறந்து நல்லொழுக்கமும், அழகும் ஒருங்கே கொண்ட தாயம்மை என்பவரை மணந்து, மனைவியின் குடும்ப வீட்டில் வசிக்கத் தொடங்கினார்.

ஒருநாள் அச்சுததாசர் தன் ஆன்மிகத் தேடலின் ஆரம்ப கட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அருகிலுள்ள பொத்தரை என்ற கிராமத்தில் வசித்துவந்த வெங்கம்மை என்னும் சிறந்த சந்நியாசியைப் பற்றிக் கேள்வியுற்று அவரைச் சந்திக்கச் சென்றார். தாயன்புடன் அவரை வரவேற்றார் வெங்கம்மை. பின்னர் இருவரும் ஆன்மிகம் பற்றி உரையாடத் தொடங்கினர். ஒருவருட காலம் அங்குத் தங்கிய அச்சுதாசர் யோகப் பயிற்சிகளைக் கற்றுக்கொண்டார். அதன்பின்னர் அவர் கஸ்தம்பாடியில் இருந்த மனைவியின் இல்லத்திற்குத் திரும்பினார். அங்குத் தனியே ஒரு அறையில் அவர் யோகப் பயிற்சிகளைப் பழகி வந்தார். இந்த யோகப் பயிற்சிகளின் மூலம் அவருக்குப் பல சித்திகள் கைவரப் பெற்றன என்று கூறப்படுகிறது. நடுவே உடல் சார்ந்த சிக்கல் ஏற்பட்டதால் யோகப்பயிற்சியைக் கைவிட்டுவிட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, தனிமையில் இருந்தபோது, மகான்களுடன் பழகியதன் விளைவாகவும், கடந்த காலத்தில் தன்னலமின்றி செய்த நற்செயல்களின் விளைவாகவும், 'நான் யார்?' 'என் இறைவன் யார்?' 'பிறப்பு இறப்புச் சங்கிலியில் ஒருவர் ஏன் சிக்கிக் கொள்கிறார்?' 'ஒருவர் எப்படி விடுதலை பெற முடியும்?' என்னும் விசாரணை மேற்கொள்ளத் தொடங்கினார். வேத நூல்களிலிருந்து 'கர்ம வினைகள் பிறப்பின் விதைகள் என்றும், கர்மச் சுழற்சி ஆத்ம ஞானத்தால் மட்டுமே முடிவுறும் என்றும், வேறு எந்த வகையிலும் முடியாது என்றும் உணர்ந்தார். இந்த ஆத்ம

ஞானம் ஒரு சத்குருவின் அருளால் மட்டுமே அடைய முடியும் என்றுணர்ந்து, பல குருமார்களை அணுகினார். ஆனால் அவர்கள் அனைவராலும் நிராகரிக்கப்பட்டு. நம்பிக்கையிழந்து வருத்தமடைந்தார்.

அப்போது போளூருக்கு அருகில் உள்ள கைலாசகிரி குன்றில் இருந்த மகானைப் பற்றிக் கேள்விப்பட்டார். கைலாசகிரி ஸ்வாமிகள் கருணையும், ஆன்மாவில் நிலைத்திருப்பதில் உறுதி நிரம்பியவராகவும் விளங்கினார். இத்துறவியின் நற்குணங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட தாசர், உடனடியாக அங்குச் சென்று சீடர்கள் சூழ்ந்திருந்த ஸ்வாமியைக் கண்டு நிறைந்த மகிழ்வுடன் அவர் காலில் விழுந்து வணங்கினார். பின்னர் எழுந்து, "எந்தையே! இந்த ஏழைக்கு அடைக்கலம் தந்து உயர்த்துங்கள்" என்று வேண்டினார். அவரது மனச்சோர்வையும் ஆன்மிக முதிர்ச்சியையும் கண்டு, ஸ்வாமிகள் அவரைக் கருணையுடன் நோக்கி, அமரச் சொன்னார்.

அன்று பௌர்ணமி. பிரார்த்தனைக்காக அங்குக் கூடியிருந்த சீடர்கள் தாசரின் நெற்றியில் இருந்த வைணவச் சின்னங்களைக் கண்டு எரிச்சலுற்றனர். அங்கிருந்து தான் வெளியேறவேண்டும் என்று சத்குரு விரும்புவதை உணர்ந்த அவர், கைலாசகிரி மலையிலிருந்து இறங்கிக் காத்திருந்தார். சிறிது நேரத்தில் சத்குரு அவரிடம் வந்து மலையடிவாரத்தில் மறைவில் இருந்த விநாயகர் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர், "குழந்தாய்! தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? தங்களை இங்குக் கொண்டு வந்தது எது?" என்று வினவினார். அதற்கு தாசர், "அன்புள்ள தந்தையே! நான் போளூருக்கு அருகில் இருந்து வருகிறேன். என் பெயர் அச்சுதன். ஆன்ம ஞானத்தை அடைய விரும்பி, பதினைந்து குருமார்களை அணுகினேன். ஆனால் யாரும் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் என்ன செய்வதென்று

*தெரியாமல் திகைத்துப் போனேன். எனவே தங்களைப் பற்றி அறிந்தவுடன் உடனடியாக இங்கு வந்தேன், நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதைப் பார்த்ததும், என் கவலைகள் அனைத்தும் விடுபட்டன" என்று பதிலளித்த தாசர், கைகளைக் கூப்பி நின்று, "தயவுசெய்து எனது உண்மையான ஆன்மாவை வெளிப்படுத்தி, மறுபிறப்பு என்னும் கடலில் இருந்து என்னைக் கடத்திச் செல்லுங்கள்" என்று பிரார்த்தனை செய்தார்.*

*தாசர் கூறிய சொற்கள் சத்குருவின் உள்ளத்தை உருக வைத்தன. தாசரிடம் அன்பாகப் பேசிய சத்குரு பின்னர் அவரைத் தன் முன் உட்கார வைத்து, வேதாந்தத்தின் நான்கு மஹாவாக்கியங்களில், ஒன்றின் மூலம் தேவையான தீக்ஷை கொடுத்தார். மேலும் அவர் ஆன்மாவின் நிஜ ஸ்வரூபத்தையும் விளக்கினார். சத்குருவிடமிருந்து தீட்சையைப் பெற்ற தாசர், தூய இதயத்துடனும், ஆத்ம ஏக்கத்துடனும் அனுக்கிரகிக்கப் பட்டதால், உடனடியாக நிர்விகல்ப நிஷ்டை (எந்தவித சாதனையும் இல்லாமல் உள்ளாழ்தல்) நிலையை அடைந்து, ஆன்ம ஞானத்தின் பாதையில் விரைவாக நங்கூரமிட்டார்.*

*வியப்படைந்த சத்குருவும் நிர்விகல்ப நிஷ்டைக்குச் சென்றார். அடுத்த நாள் அந்த ஆழ்நிலையில் இருந்து ஒன்றன்பின் ஒன்றாக இருவரும் மெதுவாக வெளியே வந்தனர். பேரின்பப் பெருங்கடலில் தன்னை ஆழ்த்திய ஆன்மாவின் நேரடி அனுபவத்தைப் பெற்ற தாசர், "ஓ, தந்தையே! நான் அதை அடைந்துவிட்டேன்; என் வாழ்க்கையின் இலக்கை அடைந்துவிட்டேன். இதுவரை யாரும் செய்யாத, 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்', என் உண்மை ஆன்மாவை மிக எளிதாக வெளிப்படுத்தி விட்டீர்கள். எனவே, இந்தத் தேதியிலிருந்து தாங்கள் 'நிஜானந்தர்' (மெய்யானந்தத்தில் மகிழ்பவர்) என்று அழைக்கப்படுவீர்கள் என்று கூறி, பின்னர் அந்தப்*

*பெயரைச் சேர்த்து ஒரு பதிகம் இயற்றி, அதை சத்குரு நிஜானந்தரின் பாதத்தில் வைத்து, கைகளைக் கூப்பியபடி நின்றார்.*

*சத்குருவான நிஜானந்தர், தாசரின் அதீத அன்பையும், தன்னிச்சையாகக் கவிதை இயற்றும் திறனையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து, "ஒளிமயமான மகனே! நெடிய, கடுமையான பயிற்சியினால் தவிர வேறு எதனாலும் அடைய முடியாத நிர்விகல்ப நிஷ்டையை நீங்கள் மிக எளிதாக அடைந்துவிட்டீர்கள். மேலும் நீங்கள் அந்த நிலையில் உறுதியாக நிலைத்து, மெய்ஞ்ஞானத்தை அடைவதில் கவனம் செலுத்துகிறீர்கள். இனிமேல் நீங்கள் 'அச்சுதானந்தன்' (குழப்பமில்லாமல் மகிழ்ச்சியில் மகிழ்பவர்) என்று அழைக்கப்படுவீர்கள். உங்களுடைய நிர்விகல்ப நிலை நிலைபெறும், ஆத்மசாக்ஷாத்காரத்தில் மகிழ்வீர்கள்" என்று அடிகளார் அருளினார். அச்சுதானந்தர் கனத்த மனதுடன் நிஜானந்தரிடம் விடைபெற்று சம்பத்கிரிக்குத் திரும்பினார். அவர் ஆறு மாதங்கள் உயர்ந்த நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் அவர் கஸ்தம்பாடிக்குச் சென்று ஒரு அழகான தோட்டத்தில் தங்கினார். அங்கு அவர் இன்னும் ஆறு மாதங்கள் இந்த நிஷ்டை நிலையில் இருந்தார். சத்குரு நிஜானந்தர், சில சமயங்களில் அவரிடம் வந்து, அவரது சந்தேகங்களைத் தீர்த்து வைப்பார். நிஜானந்தர் அச்சுதானந்தரிடம், "ஓ, சிஷ்ய மாணிக்கமே! நீங்கள் சம்சாரக் கடலைக் கடந்து, இப்போது ஜீவன் முக்தராகப் பிரகாசிக்கிறீர்கள். நீங்கள் அடைய வேண்டியது வேறொன்றில்லை" என்றுகூறி கைலாசகிரிக்குத் திரும்பினார்.*

*அகண்டகார சிவ ஸ்வரூபம் (சிவபெருமானின் எல்லையற்ற வடிவம்) அடைந்த அடிகளார், படைவீடுக்கு அருகில் உள்ள ஒரு காட்டில் சில காலம் தங்கினார். பின்னர் அவர் வட, தென் ஆற்காடு, சேலம், சித்தூர் மற்றும் செங்கல்பட்டு வழியாகப்*

*பயணித்து, சாதகர்களுக்கு ஒப்பற்ற அத்வைத உண்மையை விளக்கினார். இந்தக் காலகட்டத்தில் அவர் ஆன்மிக அறிவை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்களுக்கு வழங்கியதாகக் கூறப்படுகிறது.*

*அச்சுததாசர் கர்நாடக இசை ராகங்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார். அவர் சிறந்த இசை அமைப்பவர் மட்டுமல்ல திறமையான பாடகரும் கூட. ஒருமுறை அவர் சத்ரவாடி என்ற கிராமத்தில் ஒரு மலையில் அமர்ந்து அவரது பாடல்களைப் பாடியபோது, மலையின் புல்வெளிச் சரிவுகளில் சிதறிக் கிடந்த பசுக்கள் ஒன்று திரண்டு அவரது பாடலைக் கேட்டன. அவரது பாடல்கள் அனைத்தும் நமக்குக் கிடைத்தாலும், அவரது மயக்கும் குரல் பதிவு கிடைக்கவில்லை.*

*அச்சுதானந்தரின் பாடல்கள் அடங்கிய நூல் ‘அத்வைத கீர்த்தனா ஆனந்த-லஹிரி’ (அத்வைதப் பாடல்களின் பேரின்ப அலை) என்ற தலைப்பில் பொருத்தமாக உள்ளது. அவரது பாடல்கள் இன்றும் தமிழ் பக்தர்களிடையே பிரபலமாக உள்ளன.*

*அச்சுததாசர் 1902 வரை பல ஆண்டுகள் பயணம் செய்து சொற்பொழிவுகள் செய்தார். சுபகிருது தமிழ் ஆண்டில், தமிழ் மாதமான ஆவணி முதல் ஐப்பசி வரை, அவர் தனது சீடர்களைச் சந்தித்து, “ஓ, இனிய குழந்தைகளே! உங்களது பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள். ஆத்மானுபவத்தை (ஆன்மாவின் நேரடி அனுபவம்) நாடி நித்திய பேரின்பத்தை அடையுங்கள்” என்று கூறி, மேலும், “இதுவே எனது இறுதி வருகை” என்றும் கூறினார்.*

*கார்த்திகை மாதத்தின் இரண்டாம் நாளில், வேலூர் மாவட்டம் வல்லம் கிராமத்தில் இருந்த தனது சீடர் ஸ்ரீ அரங்கசாமி முதலியாரின் வீட்டிற்கு வந்து, ‘சன்மார்க்க தர்ப்பணம்’ (நித்திய ஆன்மாவை அடைவதற்கான*

*நேரடி வழிமுறைகளை வெளிப்படுத்தும் கண்ணாடி) என்ற ஞான சாஸ்திர நூலை எழுதத் தொடங்கினார்.*

*பதினோராம் நாள், ஒரு புதன் கிழமை மதியம் மூன்று மணிக்கு, மற்றொரு சீடரான, சித்த மருத்துவர் மந்திரமூர்த்தி பிள்ளையை அழைத்து, சில அரிய மருத்துவ முறைகளைப் பற்றிக் கூறினார். அன்றைய தினம் நள்ளிரவு மூன்று மணிக்கு சன்மார்க்க தர்ப்பணத்தை முடித்து, தன் சீடர் ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளையிடம், "ஐயா! இந்தப் புத்தகத்தை அச்சிட்டு விநியோகிக்கவும்" என்று கட்டளையிட்டார். அதிகாலை நான்கு மணிக்குப் பிறகு அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது, அருகில் இருந்த ஸ்ரீ மந்திரமூர்த்தி பிள்ளை, தேவையான சிகிச்சை அளிப்பதாகக் கூறினார். அச்சுதானந்த சுவாமிகள் சிரித்துக்கொண்டே, "தன்வந்திரி! என் நேரம் முடிந்துவிட்டது. உடல் விழக் காத்திருக்கிறது. உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று கூறினார். பின்னர் அருகில் உள்ள நாகநதிக்கு சென்று குளித்தார். திரும்பி வரும் வழியில் தான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் உள்ள ஒரு திறந்தவெளியில் சிறிது நேரம் நின்று, "இனி நடக்க வேண்டியதெல்லாம் இங்கே நடக்கும் போலிருக்கிறது" என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினார்.*

*பின்னர், அச்சுதானந்த சுவாமிகள் சிறிது திரவ உணவைக் குடித்து, தனது சீடர்கள் அனைவரையும் தன் முன் உட்கார வைத்து, உடலின் நிலையற்ற தன்மையை அவர்களுக்குத் தெளிவாக விளக்கி, வாழ்க்கையை வீணாக்காமல், சமாதி பயிற்சிக்காகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். அந்த நேரத்தில் அவருடைய நெருங்கிய சீடர்களில் ஒருவரும் அவருடைய மைத்துனியின் மகனுமான முத்துகிருஷ்ண நாயுடு வந்து, வணங்கி, மீண்டும் கஸ்தம்பாடிக்கு வரும்படி வேண்டினார்.*

*அதற்கு சுவாமிகள், "இந்த உடம்பின் நிலை சரியில்லை; எல்லாம் விரைவில் சரியாகிவிடும்,*

*பயணத்தைப் பற்றி பரிசீலிக்கலாம்" என்று பதிலளித்தார். இதைக் கேட்ட முத்துகிருஷ்ண நாயுடு, சுவாமிகளின் மறைமுகமான வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என்று யோசித்தபடி வெளியே வந்தார். சிறிது நேரம் கழித்து, கார்த்திகை மாதம், பன்னிரண்டாம் நாள், வியாழன் அன்று, சுவாதி நட்சத்திரத்தில், காலை பத்து மணிக்கு, பத்மாசன தோரணையில் அமர்ந்திருந்த அச்சுதானந்தர், தம் சீடர்கள் அனைவரையும் பார்த்துக்கொண்டே இருக்குமாறு கூறினார். பின்னர் அவர் பூத உடலை விட்டு நீங்கி, விதேக கைவல்யத்தை அடைந்தார்.*

*இதைப் பார்த்த அவரது சீடர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்து திகைத்தனர், ஆனால் விரைவில் திகைப்பிலிருந்து மீண்டு அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி யோசித்தனர். ஸ்வாமிகளின் உடல் நிலையில் எந்த மாற்றத்தையும் அவர்களால் பார்க்க முடியவில்லை, மேலும் அடிகளார் இன்னும் நிர்விகல்ப சமாதியில் இருக்கிறாரா அல்லது விதேக கைவல்யம் அடைந்தாரா (உடலை விட்டு வெளியேறிவிட்டாரா) என்பதையும் தீர்மானிக்க முடியவில்லை.*

*இதற்கிடையில், அச்சுதானந்தரின் விதேக கைவல்யத்தைக் கேள்விப்பட்டு, இந்த மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்த ஏராளமானோர் வரத் தொடங்கினர். கஸ்தம்பாடிக்கும் அவருடைய சீடர்கள் அனைவருக்கும் செய்திகள் அனுப்பப்பட்டன. அன்று மாலை சுவாமிகளின் மனைவியும், அருகாமையில் இருந்து ஏராளமான சீடர்களும், சுவாமிகளின் உறவினர்களும் திரளாகக் கூடி கனத்த இதயத்துடன் அஞ்சலி செலுத்தினர். சில அனுபவமிக்க சீடர்கள் சுவாமிகள் விதேக கைவல்யத்தில் நுழைந்துவிட்டார் என்று அவர்களுக்கு உறுதியளித்தனர்.*

*மறுநாள் நண்பகலுக்கு முன், ஸ்வாமிகள் தனக்குத்தானே பேசி நின்ற அதே திறந்த இடத்தில் சமாதிக் குழி தோண்டப்பட்டது. தற்செயலாக யாரோ*

கொண்டு வந்த புனித கங்கை நீரால் சுவாமிகளின் உடல் திருமஞ்சனம் ஸ்நானம் செய்யப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு, பூஜிக்கப்பட்டு, முத்துப் பலகையில் வைக்கப்பட்டது. மங்கள இசை முழங்க, ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ, சுவாமிகளின் உடல் சமாதிக் குழி உள்ள இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை ஐந்து மணியளவில் அதில் வைக்கப்பட்டது.

செய்ய வேண்டிய அனைத்தும் ஒழுங்காகச் செய்யப்பட்டன, மேலும் ஒவ்வொரு நாளும் ஜீவன் முக்தனுக்குரிய மரபுகளின்படி பூஜைகள் செய்யப்பட்டன. முதலாம் ஆண்டு விழாவுக்கு முன், ஏராளமான சீடர்கள் சுவாமிகளின் கருணை வடிவத்தைக் காண ஆவலுடன் இருந்தனர். ஒன்பது பக்தர்கள் ஒரு நாள் சமாதிக் குழியைத் திறந்து தெய்வீக வடிவத்தைக் கண்டனர். அவர்கள் வியக்கும் வண்ணம் சுவாமிகளின் உடலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை, அதுமட்டுமின்றி, நெற்றியில் இருந்து வியர்வைத் துளிகள் வழிந்தன. சீடர்களில் ஒருவர் உடலில் இருந்து சிறிது வியர்வையைத் துடைத்தது, அனைவரையும் திகைக்க வைத்தது. அச் செயல் பல முறை மீண்டும் மீண்டும் செய்யப்பட்டது. இந்த அசாதாரணக் காட்சியை மேலே குறிப்பிடப்பட்ட ஒன்பது பேர் உட்பட அனுக்கிரகம் பெற்ற இருபத்தொரு பேர் மட்டுமே கண்டனர். அன்றைய தினம் அலங்காரம் மற்றும் பூஜைகள் செய்து சமாதிக் குழி மூடப்பட்டது.

பஞ்சாக்ஷர மேடை (நம சிவாய ஓதப்படும் மேடை) அமைக்கும் பணி தொடங்கியதும், சுவாமிகளின் உடல் நெற்றியில் வியர்வை மற்றும் கருணை வடிவத்தின் நிலையைக் கேள்விப்பட்ட மக்கள் உள்ளே வந்தனர். பெருந்திரளான மக்கள், தரிசனம் மற்றும் பிரார்த்தனை செய்யவேண்டி சமாதிக் குழியை மீண்டும் திறக்குமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்கள். மாலையாகிவிட்டதாலும், கட்டுமானப் பணியை முடிக்க வேண்டியதாலும், சீடர்கள் அதைத் திறக்க

*மறுத்ததால், திரண்டிருந்த மக்கள் கொந்தளித்து, சமாதிக் குழியை வலுக்கட்டாயமாகத் திறக்க முயன்றனர். என்ன செய்வதென்று தெரியாமல் சீடர்கள் திகைத்து நின்றனர். திடீரென பலத்த மழை பெய்து, மழைக்குத் தஞ்சம் இல்லாததால் மக்கள் கலைந்து சென்றனர். இதனால், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன.*

*ஸ்வாமிகளின் கருணையான உடல் நிலைக்கான காரணம், பெரியோர்களால் விவாதிக்கப்பட்டாலும் அதை யாராலும் விளக்க முடியவில்லை. பின்னர், சுவாமிகளின் ஆராதனை விழா ஒன்றில், பகவானைத் தரிசனம் செய்த வேதாந்த குருவான கே.வடிவேல் செட்டியார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சுவாமிகளின் உடல் நிலை குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, யோகப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்ற ஒருவர் மூச்சைப் பிடித்து அகண்ட சமாதி நிலையில், அதாவது சிந்தனையற்ற மூச்சுத் திணறல் நிலையில் மிக நீண்ட நேரம் இருக்க முடியும் என்று விளக்கினார். அடிகள் ஒரு ஞான சித்தராகவும், ஞானத்தின் (அறிவின்) உச்சியை அடைந்தவராகவும், அதே போல் யோக சித்தராகவும், யோகப் பயிற்சிகளின் உச்சத்தை அடைந்தவராகவும், ஜீவ சமாதி நிலையில் இருப்பதால், அவரது உடலில் எந்த மாற்றமும் இல்லை.*

*பின்னர், சுவாமிகளின் சீடர்களான மந்திரமூர்த்தி பிள்ளை மற்றும் ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளை சகோதரர்கள் மிகுந்த சிரத்தை எடுத்து, பெரும் பொருட்செலவில் ஒரு கோவிலையும் மடத்தையும் கட்டி, கும்பாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்து, புதிய ஆலயம் மற்றும் மடத்தின் பொதுப்பணிகளைக் கவனித்து வந்தனர். காலப்போக்கில், மடம் புனரமைக்கப்பட்டு 'அச்சுத நிலையம்' என்று பெயர் மாற்றப்பட்டது. இந்த மடம் திருவண்ணாமலை-போளூர்-வேலூர் நெடுஞ்சாலையில் (தேசிய நெடுஞ்சாலை-234) அமைந்துள்ளது. இது*


*போளூரில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவிலும், திருவண்ணாமலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் 67 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இம்மடம் கண்ணமங்கலம் என்னும் ஊருக்கு ஒரு கிலோமீட்டர் முன்பு கீழ்வல்லம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. அங்கு ஒரு பாலம் உள்ளது. அப்பாலத்திற்கு இடதுபுறம் திரும்ப வேண்டும்.*

*புகழ்பெற்ற இசை வித்தகரும், ஞானியுமான ஸ்ரீ அச்சுதானந்த அடிகள், அப்போது பிராமண சுவாமிகள் என்று அனைவராலும் அறியப்பட்ட பகவானை, குருமூர்த்தத்தில் இருக்கும்போது தரிசித்தார். அக்காலத்தில் பிரபலமான ஆன்மிக குருவாகத் திகழ்ந்த தாசர், பகவானைத் தரிசிக்க வந்தபோது, திருவண்ணாமலைக்கு வடக்கே உள்ள போளூர் பகுதியில் மட்டும் அவருக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீடர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு முக்கியமான மரியாதைக்குரிய சுவாமி என்றாலும், அவர் தனிப்பட்ட முறையில் பகவானது கால்களைப் பிடித்து விடுவார். அவருடன் வந்த சீடர்கள் பகவானைத் தொட முற்பட்டபோது அவர்களைத் தடுத்து, "இது நெருப்பு மலை (நித்திய ஞானத்தின் நெருப்பு) ஜாக்கிரதை" என்று எச்சரித்தார். பகவானது உண்மை நிலையை தொடக்கக் காலத்தில் உணர்ந்த சிலரில் இவர் ஒருவர்.*

*இப்புனித சன்னிதியை வாழ்வில் ஒருமுறையேனும் தரிசிக்க வேண்டுமென்ற விதை விருட்சமாக வளர்ந்து வந்தது. அதற்கான சந்தர்ப்பமும் கடந்த 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதி வேலூர் மற்றும் குடியாத்தம் பகுதியில் உள்ள ரமண அன்பர்களை சந்திக்கச் சென்றிருந்தபோது கிடைத்தது. காலையிலேயே வேலூரைச் சேர்ந்த இனிய நண்பரும் ஆன்மிக தகவல் சுரங்கமுமான திரு.பாலமுருகன் ஐயாவுடன் ஒரு TVS XL-இல் புறப்பட்டு கண்ணமங்கலத்திற்கு விரைந்தோம்.*

சரியாக 10.00 மணிக்கு அங்குச் சென்றடைந்தோம். கதவு பூட்டியிருந்ததைக் கண்டு மனம் வருந்தியது. இவ்வளவு தூரம் பயணித்து வந்து அவரின் சமாதியைத் தரிசிக்காமலே சென்று விடுவோமா என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, “அண்ணாத்த! நான் கம்முனு அங்கு நின்னு உங்கள பாத்துக்கினு இருந்தேன். இங்கதான் வந்திருக்கீங்களா! இருங்க சாவிய எடுத்துனு வரேன் என்று வட ஆற்காடு தமிழில் ஒரு வயதான அம்மா பேசுவதைக் கேட்டு திரும்பிப் பார்த்தோம். அவர் அந்த சமாதியிடத்தின் காப்பாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு எங்களை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று ஆரத்தி காண்பித்து இன்முகத்துடன் வழியனுப்பி வைத்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஆரணியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினோம்.

*குறிப்பு: அச்சுததாசர் அவர்களின் ‘சன்மார்க்க தர்ப்பணம்’ என்னும் அத்வைத நூல் பகவான் ரமண மகரிஷிகளின் உத்தரவுப்படி 1926-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி நோபில் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (புத்தகத்தின் முகப்பு அட்டை இணைக்கப்பட்டுள்ளது.)*



உ

ஓம்

தத் ஸத்

ஸ்ரீ கைலாயகிரி பிரமபீடம்

ஸ்ரீமத், சம்பத்கிரி ஸ்ரீ அச்சுதானந்த ஸ்வாமிகளால்

இயற்றப்பட்ட

சன்மார்க்க தர்ப்பணம்.

(மூலமும்,)

மேற்படி ஸ்வாமிகளின் பிரதம மாணாக்கராகிய

இயற்றப்பட்ட

(உரையும்,)

மேற்படி ஸ்வாமிகளின் மாணாக்கராகிய

அவர்களால்,

திருவண்ணாமலை

ஸ்ரீரமண மஹரிஷியவர்களின்

உத்தரவுப்படி

திருவல்லிக்கேணி, நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

காபிரைட்] 1926. [விலை அணா 3.

LIBRARY,
No. 1439
26-1-50



# பசு லக்ஷ்மி

1926ஆம் வருடம் போளூருக்கு அருகே குடியாத்தம் என்ற கிராமத்திலிருந்து அருணாசலம் பிள்ளை என்பவர் ஒரு பசுவையும் கன்றுக்குட்டியையும் கொண்டு வந்து அதை ஆச்ரமத்திற்குக் கொடுத்து விடப் போவதாகவும் கூறியிருந்தார். ஆனால் ஆச்ரமத்தில் அப்பொழுது அதைக் கவனித்துக் கொள்ள யாருமில்லை. மேலும் சிறுத்தைகளின் தாக்குதலிலிருந்து அதைக் காப்பாற்றுவது என்பது கடினம். எனவே பகவான் அருணாசலம் பிள்ளையிடம், "ஆச்ரமத்தில் அதைக் கவனித்துக் கொள்ள வசதியில்லை" என்றார். எவ்வளவோ எடுத்துக் கூறியும் அருணாசலம் பிள்ளை கேட்காமல் தாயையும் கன்றையும் பகவானிடம் விட்டுச் செல்வதில் உறுதியாக இருந்தார்.

அந்தப் பக்தரின் உறுதியையும் அதற்குப் பின்னணியாக இருந்த பக்தியையும் கண்ட ராமநாத பிரம்மச்சாரி எழுந்து நின்று, 'நான் இந்தப் பசுவையும் கன்றையும் பார்த்துக் கொள்கிறேன்' என்று மார்தட்டிக் கூறினார். பொதுவாக அவர் உரக்கப் பேசமாட்டார். ஆனால் அன்றோ அவர் ஆவேசம் வந்ததுபோல் மார்தட்டிக் கொண்டு, 'இதோ நான் இங்கே இருக்கிறேன். இந்தப் பசுவை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று கூறினார்.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் அந்தக் கன்றுக் குட்டிக்கு 'லக்ஷ்மி' என்று பெயரிடப்பட்டது. இப்படியாக அருணாசலம் பிள்ளையின் உறுதியினாலும்

*ராமநாத பிரம்மச்சாரியின் சபதத்தினாலும் பசுவும் கன்றும் ஆச்ரமத்தில் வசிக்கத் தொடங்கின.*

*பசு லட்சுமி உடலால் மிருகமாக இருந்தாலும் பகவானின்மீது கொண்ட அசாதாரண பக்திப் பிரேமையினால் ஆன்மிக முன்னேற்றம் அடைந்து அவரது திருக்கரங்களால் முக்திபெறும் பேறு பெற்றவள். பகவான் அப்பசுவினிடம் காட்டிய கருணையும் வாத்சல்யமும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.*

*வெவ்வேறு ஆண்டுகளில் பகவானின் ஜயந்தி தினம் அன்றே பசு லட்சுமி கன்றுகள் ஈன்றாள்.*

*1948ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் பசு லட்சுமி நோயுற்றிருந்தபோது பகவான் அவள் அருகில் சென்று அவளது தொய்ந்த தலையைத் தன்மடி மீது சாய்த்து அவளது கண்களைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் தீட்சையளிப்பதுபோல் தன் கையை அப்பசுவின் தலைமீது வைத்து, பின்னர் இதயத்திலும் அருட்கரம் நீட்டினார். பசுவின் கன்னத்துடன் தம் கன்னத்தை இருத்தி உடலை வருடினார். அவளது ஜன்ம வாசனைகள் நீங்கிய நிலையை உணர்ந்தவராய் அவளிடம் விடைபெற்றார். அவளின் உயிர் பிரிந்தபிறகு ஆச்ரம வளாக வெளியில் முழு அந்திமக் கிரியைகளுடன் அவளது உடல் புதைக்கப்பட்டது. பசு சமாதிமீது ஒரு கற்பீடம் அமைத்து அதன்மேல் பசு லட்சுமியின் உருவ பிரதிமை நிறுவப்பட்டது. பசுவின் முக்தியைக் குறிக்க பகவான் இயற்றிய கீழ்க்கண்ட வெண்பா லட்சுமி சமாதியில் வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.*

*சருவதா ரிப்பேர்கொள் சம்வச் சரத்து*
*வருமானி யைந்துசனா வாரம் – மறுவுமுற்*
*பக்கத் துவாதசிவி சாகம் பசுவாமி*
*லக்குமிவி முக்தநா ளாம்.*

# என்.ஆர்.கே.2

## வி.நிரஞ்சன்

*காணும் தனை விட்டுத் தான் கடவுளைக் காணல்*
*காணும் மனோ மயமாம் காட்சி*

*– உள்ளது நாற்பது 20*

*கண்டன நிழற்சக விசித்திரம் உள்ளும்*
*கண் முதல் பொறி வழி புறத்தும் ஒர் சில்லால்*
*நின்றிடும் நிழற்படம் நிகர்*

*– அருணாசல அஷ்டகம், பாடல் 6*

1931இல் இருந்து என்.ஆர்.கே. மதுரையில் தனக்கு அருகில் இருந்த ரமண பக்தர்களுடன் இணையலானார். ரமண பக்தர்கள் அளவு கூடலாயினர். பகவானின் ஜயந்தியை அவர்கள் சிறப்பாகக் கொண்டாடலாயினர். விளாச்சேரி ரங்க அய்யர், மணி அய்யர், வெங்கடரமண அய்யர், சுப்பையாத் தேவர், நாராயணசாமி இவர்கள் எல்லோரும் பகவானின் பள்ளிப் பருவ நண்பர்கள். ஒரு நாள் கூட விடாமல் இவர்களைச் சந்திப்பது என்.ஆர்.கே.யின் வழக்கமாயிற்று. இரவு வெகு நேரம் ஆன பிறகு தான் வீடு திரும்புவார்.

பகவானின் மீது கொண்டிருந்த அன்பின் விளைவால் விளைந்தது இவர்களது இணக்கம்.

நாராயணசாமி பகவானைப் பற்றி நினைவு கூர்ந்த இரண்டு நிகழ்ச்சிகளை இங்கே நினைவில் கொள்ளலாம். சொக்கப்ப நாயக்கன் தெரு வீட்டின்

ஆதாரம்: *The Power of Presence, Part One, N.R. Krishnamurti Aiyer.*



மாடியில் பகவானும் மற்ற நண்பர்களும் ஒரு வட்டமாக நின்றுகொண்டு பந்து பிடித்து விளையாடுவர். அவர்களிடம் பந்து ஒன்றும் இருக்காது. பகவான் தான் தன் உடம்பைப் பந்து போல் வளைத்துக் கொண்டு இறுகக் கட்டிகொண்டு விடுவார். அவரைப் பந்தாக்கி மற்றவர்கள் ஒருவரிடம் இருந்து ஒருவர் தூக்கி எறிந்து பிடித்து விளையாடுவர். அடிக்கடி அவர்களது கைகளில் இருந்து நழுவி பகவான் தரையில் விழுந்து விடுவார். ஆனால் அவரது உடலில் எவ்வித காயங்களோ சிறாய்ப்புக்களோ வலியோ இரா. பகவானும் உணர்வற்ற மனிதப் பந்தாய் இருப்பார். இது அவர்களுக்கு மிகுந்த வியப்பாய் இருந்தது.

பகவான் ஆன்ம சாக்ஷாத்காரம் அடைந்து திருவண்ணாமலையைக்குப் புறப்பட்ட காலத்துக்குச் சற்று முந்திய காலம்அது. பகவான் மாடியில் பல முறை உள் ஆழ்ந்து சிலை போல் அமர்ந்திருப்பதை நாராயணசாமி காண்கிறார். அது ஏதோ ஒரு வித தியானம் என்று கருதி தானும் அவ்வாறு அமர்ந்து இருக்க விரும்புவதாகத் தெரிவித்தார். பகவான் அவரை பத்மாசனத்தில் அமரச் சொல்லி அவரது புருவ மத்தியில் ஒரு பென்சிலின் முனையை அழுத்தினார். நாரயணசாமி உடல் சுற்றுப் புற உணர்வு இழந்து அரை மணி நேரம் அசலமானார். விழித்துப் பார்க்கையில் பகவான் முகம் மலர்ந்து இருப்பதைக் கண்டார். பின்னர் தானாக அந் நிலையை அடைய முயற்சித்தபோது, அம்முயற்சிகளில் தோல்வி அடைந்தார்.

விளாச்சேரி ரங்கன் அவர்கள் இன்னொரு வியக்கத் தகுந்த நிகழ்ச்சியைச் சொல்லி இருக்கின்றார். அது

அன்னையாரின் சமாதி களிமண்ணால் ஆகிய கட்டிடம் ஆக இருந்த காலம். சுவரின் பக்கத்தில் ஒரு பலகையின் மேல் பகவான் அமர்ந்து இருந்தார். ரங்கன், ராமசாமிப் பிள்ளை மற்றும் சிலர் பகவானுக்கு முன் உட்கார்ந்து 'ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்' பாடிக்கொண்டிருந்தனர். ரங்கன் பகவானுக்கு வெகு அருகில் உட்கர்ந்திருந்தார். தந்திடாய் தளிர் பொற்பாதம் தமியனேன் சிரத்திற் சூடி / நொந்திடா வாழ்வது எய்தி நொடியதில் பவ நோய் போக்க/ அந்தணர் அமரர் காணா அருணை வாழ் ரமணா மோனா/ எந்த நாள் அடைவன் உன்னை இரு விழி மணியே சொல்லாய் என்னும் (பொன்னொளிர் பத்து, ரமண ஸ்துதி பஞ்சகம்) பாடலின் முதல் வரியைப் படித்துக் கொண்டிருந்தபொழுது பகவானுடைய பாதம் சற்றே தாழ்ந்து ரங்கனுடைய சிரசைத் தொட்டவாறு இருந்தது. அதே நேரம் ரங்கனும் பாடிக்கொண்டிருந்தவர்களும் ஒரு பரவசத்தில் ஆழ்ந்தனர். அதற்கு மேல் பாடலின் அடுத்த அடியைப் பாட இயலவில்லை. அந்த ஒரு, வரியை மட்டும் மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டிருந்தனர். பகவான் பாதம் ரங்கனது சிரசை விட்டு விலகிய பின்னரே அடுத்த வரியை அவர்கள் பாட முடிந்தது. இவ்வாறு அவர்கள் பகவானுடைய மேன்மையை நினைவு அலைகளாகப் பரிமாறிவந்தனர். பகவானின் மீது விழையும் பக்திப் பெருக்கால் மகிழ்ந்திருந்தனர்.

ஒரு மாலை நேரம் சுப்பையாத் தேவரின் வீட்டில் என்.அர்.கே.யும் வெங்கடரமண அய்யரும் தியானம் செய்வதற்குக் கூடுகின்றனர். வெங்கடரமண அய்யர் ரமண கீதையின் பதினெட்டாவது அத்தியாயத்தைப் படித்துவருகின்றனர். ரமண கீதை பகவானின் உபதேசங்களின் வட மொழித் தொகுப்பு ஆகும், கணபதி முனியால் ஆக்கப் பட்டது. பதினெட்டாம் அத்தியாயம் ஞானிகளைப் போற்றுமுகமாக அமைந்திருந்தது. ஞானிகளில் தலை சிறந்தவராகவும் அருணாசலேசுவரரே மனித உருக்கொண்டவராயும் மகரிஷி திகழ்கின்றனர்

என்பதை உள்ளடக்கியதாக இருந்தது. பாடல் பதின்மூன்றில் நீல அரவிந்தன் என்னும் சொற்றொடர் வாசிக்கப்பட்ட உடன் என்.ஆர்.கே. தன்வயம் இழந்தார்

உருண்டு கிடக்கும் சர்ப்பம் ஒன்று, பிரகாசமானது, அவரது தண்டுவடத்தின் அடிப் பகுதியில் இருந்து மேல் நோக்கி ஏறுகின்றது. மின்னல் போல் அவரது உச்சம் தலைக்கு ஏறியது. அது ஒரு குடை போல் உச்சந் தலையில் விரிந்து பரவியது. அத்தனையும் ஒளிக் கதிர்கள். ரோஜா நிறத்தில் இருந்தன. அவை அவரது நாசியின் அடிப்பாகத்தில் ஓர் ஒளிப் புள்ளியாக ஒருங்கிணைந்தன. உடனேயே அங்கிருந்து இறங்குமுகச் சுற்றாக வளைந்து தண்டு வடத்தின் அடியிலிருந்து முன்னர் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பியது அவ்வொளி. அதே நேரம் கூம்பு வடிவாய் அருணகிரி அவரது தலை மேல் தோன்றியது. மலையின் சிகரத்தில் இருந்து அமிர்தம் பொழியத் துவங்கியது. அமிர்தம் அவரது சிரத்தில் இறங்கியது. என்.ஆர்.கே.அமிர்த மழையால் நனைந்து ஆனந்தப் பரவசரானார். உடல் உணர்வை இழந்தார். காலம் கடந்தார். ஒளிக் கதிர்கள் மட்டும் ஒளிர்ந்து கொண்டிருந்தன. உடல் உணர்வு திரும்பிய போது ஒளிக் கதிர்கள் மறைந்து விட்டிருந்தன. அவரது புருவ மத்தியில் மட்டும் ஓர் ஒளி நிலைத்து நின்றது.

(தொடரும்)

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# ரமண புராணம்

## ஆகுரா

### சிவ புராணம் - ரமண புராணம்

‘புராணம்’ என்கிற ஸமஸ்கிருத சொல்லானது புரா-நவ என்ற இருவேர்களில் இருந்து பிறந்தது என்பர். இதன் பொருள்:

‘பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய்’ இருக்கக்கூடியது என்பதாகும். புராணம் என்ற இச்சொல் தமிழிலும் பயன்பாட்டில் உள்ளது.

சிவ புராணம், ரமண புராணம் இவற்றில் புராணம் என்பது இயல்பை, சுபாவத்தை கூறுவதாக அமைகிறது. ஆகவே புராணம் என்பதை இயல்பு என்று கொள்ளலாம். சிவனைப் பற்றியும் ரமணனைப் பற்றியும் அவர்களது இயல்பின் இயல்பை உணர்த்திக் காண்பிக்கிறது. ரமண புராணத்தில், ‘இருவேறு இன்றி மேவு சுபாவத்தில் ஒத்த சொரூப மெய்’ என்று ரமணனின் சுபாவத்திற்கும் ‘இன்னபல ஆற்றால் எடுத்தெடுத்து நின்திருமுன் நின்னியல்பு யான்இசைக்க நேர்ந்ததும் என் பாக்கியமே’ என்று சுபாவத்திற்கும் பொருந்தி வருவது நினைவு கூறத்தக்கது.

‘சிவ புராணம்’ என்பது சிவனின் பெருமையை வெளிப்படுத்துவது. “சிவன் அனாதியானவன். ஆதி அந்தம் இல்லாதவன். சிவன் அடி முடி காணக் கிடைக்கப் பெறாதவன். எல்லைகள் அற்ற, போக்கும் வரவும் இல்லாத புண்ணியன். தோன்றாப்



பெருமையன், ஆதியன் அந்தம் நடுவாகி அல்லான்" என்று சிவபெருமான், சிவ புராணத்தில் சித்தரிக்கப் படுகிறார். சிவன், ஏகன்; அவனே அநேகன். ஏகமாகிய ஆத்மாவினின்று அகந்தை உதித்து, அதுவே அநேகமாக விரிந்து ஆன்மாவால் ஒளிர்விக்கப் படுகிறது. "மணிகளிற் சரடென உயிர்தொறும் நானா மதந்தொறும் ஒருவனாய் மருவினை நீ தான்" என்பது 'ஸ்ரீ அருணாசல அஷ்டக'த்தில் பகவான் ரமணர் அருளிய வாக்கு. அதாவது, "பலவித மணிகளால் ஒரு மாலை கோர்க்கப்படுகிறது. அங்ஙனம் பல்வேறு மணிகளை மாலையாகக் கோர்ப்பது, அவைகளின் ஊடே செல்லும் ஒரே நூல்தான். அதைப்போல ஒவ்வொரு உயிர்களுக்கு உயிராகவும், பல்வேறு மதங்களுக்கு அதனதன் தெய்வங்களாகவும் அருணாசலனாகிய நீயே ஒருவனாகவே இருந்து விளங்குகிறாய்" என்பதாகும்.

அருணை ஈசனான ரமணனும் சிவனே. அருணாசலனே சத்தியமங்கலம் வேங்கட ரமண ஐயர் என்பதாக வந்தருளிய 'ரமண ஸ்துதி பஞ்சக'த்தில் ரமணனை,

"தங்கும் சிவலோகம் தன்னை விட் டுத்தய
வாகத் திருச்சுழி தன்னில்வந்து;
அங்கும் இருக்க மனம்சகி யாமலே
அருண கிரிதன்னை நாடிவந்தான்".

*என்று உறுதியாகக் கூறுகிறார். ரமணரும் அருணாசல சிவனும் வேறு வேறு அல்ல என்பதற்கு இதை விடச் சிறந்த சான்று வேண்டுமா? ஆக சிவ புராணம் மற்றும் ரமண புராணம் இரண்டும் வேறு வேறு அல்ல.*

## அல்லல் பிறவி அறுப்பானே

*மணிவாசகர் அருளிய சிவ புராணத்திற்கும் முருகனார் இயற்றிய ஸ்ரீ ரமண புராணத்திற்கும் ஒற்றுமைகள் உண்டு. சிவ புராணத்திற்கும் ரமண புராணத்திற்கும் ஒருவரே பாட்டுடைத் தலைவர் என்பதாகக் கொள்ளலாம். மணிவாசகர் சொல்ல சிவபிரான் எழுதியது திருவாசகம். சிவ புராணம், திருவாசகத்தில் அடங்கியது.*

*முருகனார் மூலம் ரமணர் எழுதியது ஸ்ரீ சந்நிதிமுறை. ரமண புராணம், ஸ்ரீ ரமண சந்நிதி முறையில் அடங்கியது. ரமண புராணம், சிவ புராணம் இரண்டும் அடிமுடிக்கு உண்டாய அநாதித் தொடர்பைக் காட்டுவது. அதாவது ஜீவனுக்கும், ஆன்மாவுக்கும் இடையே உள்ள தொடர்பை காண்பிப்பது. அந்தத் தொடர்பு ஒரு மாயை, சித் ஜடக் கிரந்தி. அந்த மாயா முடிச்சை அவிழ்க்கும் வழியை சிவ, ரமண புராணங்கள் காண்பிக்கின்றன.*

*ஒரு உயிரின் கர்ம வினை என்பது அகந்தையே. உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு வித்தாக அமைவதுடன், உயிர்கள் ஆன்மாவை உணர இயலாமல் தடையாகத் தோன்றுவதும் இந்த உயிர் அகந்தையே.*

*இதனையே ரமண புராணத்தில்,*

*“உயிர்அகந்தை போனால் ஒழியவிளங்காத*
*செயிர்அறு மெய்ஞ்ஞான திரவியச் சீமான்” (395-6)*

*என்றும்*

*“அகங்கார ஓசை அடங்கும் இடத் தேதன்*
*முகம் காணத்தோற்றும் அதி மோகனமெய் யோன்” (397-8)*

*என்றும் கூறப்படுகிறது. அகந்தை ஒரு உருவத்தைப் பற்றியே இருக்கும். அகந்தையே பல பிறவிகள் எடுக்கக்*



காரணமாக அமைகிறது. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைக்க வைக்கிறது.

"ஆருயிர்க்குளஞ் ஞான்றும் தவாஅப் பிறப்புஈனும் வித்து"

*(241-2)*

என்று அகந்தையை 'ரமணபுராணம்' கூறுகிறது.

தேகத்தை அபிமானித்து எழுவது தேகாத்ம பாவம். அந்த ஜீவபோதத்தினால் ஏற்படும் இன்னல்களுக்குக் காரணம் அகந்தை தான். நமதுள்ளே உள்ள இறைவனை (உள்ள பொருளை) உணர விடாமல் அந்த அகந்தைதான் தடுக்கிறது. இந்த விவேகத்தை இப்புராணங்கள் கொடுக்கின்றன. ஆழ்ந்த அறிவால் வைராக்கியத்துடன், 'அகந்தை எழும் இடம் யாது?' என்று விசாரம் செய்து, அகந்தையை வேரோடு அறுக்கும் வழி இவற்றில் சொல்லப்பட்டுள்ளது. அத்துடன் புத்தி அகங்காரம் இவற்றை அகந்தைப் பற்று அற்றவனின் தாள்களில் சமர்ப்பணம் செய்வதன் மூலமாகவும் வீடுபேறு அடையலாம் என்றும் உணர்த்தப்படுகிறது.

## உள்ளமெனும் உள்ள பொருள் இரண்டற்றது

உள்ளபொருள் உள்ளத்தே எண்ணங்கள் அற்ற, எண்ணுதற்கு எட்டா நிலையில் உள்ளது. அது இரண்டற்ற ஏகப் பொருளாக உள்ளது. உள்ளத்தே உள்ள பொருள் "இருவேறு இன்றி மேவு சுபாவத்தில் ஒத்த சொரூப மெய்" என்று 'ரமண புராணம்' நவில்கிறது.

*"யான்உதயம் எங்கிருந்துஎன்று எண்ணம்அற எண்ணலால்*
*யான்உதய மாக இதயத்துள் யான்அறவே*
*செத்துஅஞ் சுணர்வுஅகத்துள் சிக்கெனத்தற் சேர்ந்தோர்தம்*
*சித்தம் சிவமாம் திருமூலத் தானமே" (523-6)*

என்னும் 'ரமண புராண' வரிகள் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அந்த உள்ள பொருளை அகந்தை நீக்கத்தால், அப்படியே உணரமட்டுமே முடியும்.

நான் எனும் அகந்தை உதியாது உள்ள நிலையே நாம் அதுவாய் உள்ள நிலை. இந்த வரிகளை 'உள்ளது நாற்பது' என்னும் பகவான் ரமணரின் உபதேச நூலில் காண்கிறோம்.

மணிவாசகர் அருளிய 'சிவ புராணம்' மற்றும் பகவான் அருளிய 'ரமண புராணம்', 'உள்ளது நாற்பது', 'உபதேச உந்தியார்', 'அருணாசல அக்ஷரமணமாலை', இன்னும் ரமண பகவான் நமக்கு அருளிய அனைத்து உபதேச நூல்களும் இந்த சத்தியப் பொருளைப் பற்றியே பேசுகின்றன. இது மட்டுமல்ல; நம் ஞானிகள் அருளிய உபதேசங்களும் இந்த சத்தியத்தின் தரிசனத்தையே விளக்குகின்றன. சத்தியமாக உள்ளாழ்ந்த அறிவால் இதை உணரலாம்.

## துதிப்போர்க்கு வல்வினை போம்

'சிவ புராணம்' எதற்காக வெளிவந்ததோ அதே நோக்கத்தை அகத்தில் கொண்டதே 'ரமண புராண'மும். இவை இரண்டையும் ஓதுவதன் பயன் ஆத்மாவை உணர்தற் பொருட்டே. முந்தைய வினைகள் அனைத்தும் அவன் அருளால் தீர்வதற்காக உள்ளம் மகிழும் வகையில் இவற்றை ஓதவேண்டும்.

'போற்றி போற்றி என்று புகழ்ந்து பொய் கெட்டு மெய்யாதல்' வேண்டும். 'பூங்கழல்கள் வெல்க' என்று பாத கமலங்களைப் பூசை புரியவேண்டும்.

அகந்தையின் வடிவமான முந்தைய வினைகள் அனைத்தும் ஓய இறைவன் அருள் தேவை என்பதை

'சிவ புராண'மும் 'ரமண புராண'மும் ஒரு சேர எடுத்துக் கூறுகின்றன. 'சிவ புராணம்' மற்றும் 'ரமண புராணம்' இவை இரண்டின் இறுதி அடிகளும், 'அல்லல் நிறைந்த பிறவியை நீக்கும் வல்லமை பெற்ற' திருவடிகளைப் பணிந்து இப்பாடல்களைப் பொருள் உணர்ந்து, சொல்லுபவர்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைவார்கள் என்று வலியுறுத்துகின்றன.

"ஓங்கு பரபக்தி உருத்தெரியப் பக்குவர்க்குப்
பாங்குபெற நீபோய்ப் பயின்றுஒழுகிக் காட்டுகஎன" (13-4)

சகஜநிஷ்டனான நந்தீசனுக்கு இட்ட சிவ ஆணையின்படி வெளிப்பட்டவை சிவ புராணமும், ரமண புராணமும் ஆகும்.

## ரமண புராணம்

இனி 'ரமண புராணம்' உட்செல்வோம். அதன் பொருள் விளங்குதல் என்பது மொழி மூலம் புரிதலில் இல்லை. அவரவர் பக்குவத்தைப் பொறுத்தே அது விளங்கும். இதைப் பாராயணம் செய்து ரமணபுராணமாக நாம் ஆதலே, அதன் பொருள். அருணாசல அக்ஷரமணமாலைக்குப் பொருள் வேண்டி நின்ற பக்தர்களுக்கு, ரமணர் "அதைப் பாராயணம் செய்வதே அதன் பொருள்" என்று கூறியது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

## ஸ்ரீ முருகனார் - ரமண புராணம்

ரமண புராணம், ஸ்ரீ ரமண சந்நிதிமுறை என்னும் நூலின் முகப்பு ஆகும் எனலாம். இதை ரமணரின் பேரருளால் இயற்றியவர் ராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் அறிஞர் முகவைக் கண்ண முருகனார். இயற்பெயர் சுப்பிரமணியம். பிறந்த ஆண்டு 1890. இவர் தமிழில் பாண்டித்யம் பெற்றவராக, தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். திருக்குறள் அவருக்குத் தலைகீழ்ப் பாடம். தமிழ்ப் பேரறிஞர் களாக இருந்த மு. இராகவையங்கார், டாக்டர் உ.வே. சாமிநாத

அய்யர், ராவ் பகதூர் செங்கல்வராய பிள்ளை மற்றும் சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்களுடன் முருகனார் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். 'தமிழ்ச் சொல் அகராதி' தொகுக்கும் பணியில் முருகனாருக்குப் பெரும்பங்கு இருந்தது. சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றிய நாட்களில் அவரது மாமனாரின் வாயிலாக ரமணரின் 'அக்ஷரமணமாலை' போன்ற நூல்கள் வாசிக்கக் கிடைக்கப் பெற்றார்.

முருகனார் ரமணரைத் தரிசிக்கும் முன்பே, ரமணரைப் பற்றி நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டு உள்ளம் நெகிழ்ந்தவர். மணிவாசகரைப் போன்ற வாழ்வு நமக்கும் வாய்க்குமா என்று ஏங்கியவர். ரமணரை முதன்முதலாக சந்திக்க ஒரு நாள் திருவண்ணாமலை வந்தார். ரமணரைத் தரிசிக்கும் முன்பே அண்ணாமலை திருக்கோயிலில் இருந்தபடி குருவிற்குக் காணிக்கையாக எழுதிய பாடலே 'ஸ்ரீ ரமண தேசிகப் பதிகம்'. ரமணர் வேறு யாரோ அல்ல சிவபெருமானே என்று உணர்ந்து எழுதியதே அந்தப் பதிகம். பிற்காலத்தில் அது 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை'யில் சேர்க்கப் பட்டது. இவரைப் பற்றிய முழு விவரங்களை ஸ்ரீ ரமணாஸ்ரமப் பதிப்பான 'ஸ்ரீ முருகனார்' என்னும் நூலில் வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

## ஸ்ரீ ரமண தேசிகப் பதிகம்

நம் போன்று பகவானை உடலுடன் காணும் பாக்கியம் கிடைக்காத ரமண அன்பர்கள் அநேகர். அவர்கள் யாவரும் ரமணரின் மாண்பால் ஈர்க்கப் பட்டவர்கள். அத்தகைய இலட்சோப இலட்சம் ரமண அன்பர்களின் உணர்ச்சிப் பிழம்பாகத் திகழ்வதே 'ஸ்ரீ ரமண தேசிகப் பதிகம்'.

ஸ்ரீ முருகனார் நமக்கு ஒரு சிறந்த ரமண வழிகாட்டி. எனவே இந்தப் பதிகத்தை அறியாமல் 'ரமண புராணம்' உட்செல்ல இயலாது.

"பார்வளர் கயிலைப் பருப்பத நீங்கிப்
பண்ணவர் சூழலை விட்டு

*வாரொளி மணிபோல் வாசகர் வாக்கை*
*வளர்செவி மடுத்திட விரும்பி*
*ஏர்வளர் பெருந்தண் துறை அடைந்தாற்போல்*
*இழிசினேன் புன்சொலும் வேட்டுச்*
*சீர்வளர் அருணைச் செழும்பதி சேர்ந்தாய்*
*தேசிக ரமணமா தேவே”*

*- ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, தேசிகப் பதிகம், பாடல் 1*

*கயிலை வாசனாகிய சிவபெருமான் அன்று மாணிக்க வாசகரை திருப்பெருந்துறையில் ஆட்கொண்டார். மாணிக்கவசகர் கூற, சிவபெருமான் தனது எழில் கரத்தால் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் உலக மக்கள் வீடுபேறு அடைய வேண்டி எழுதி அருளினார். அதைப் போன்று முகவைக் கண்ண முருகனாரும், சிவனின் அவதாரமாகிய ரமணரால் ஆட்கொள்ளப்பட்டார். ‘ஸ்ரீ ரமண சந்நிதிமுறை’ என்னும் திருவாசகம் ஒத்த நூலை ஸ்ரீ முருகனார் முன்னெடுக்க ரமணர் எழுதி முடித்தார். ஸ்ரீ முருகனார் பகவான் ரமணரைக் காணும் முன்னரே, ரமணர் வேறுயாரும் அன்று, சிவபெருமானே என்ற தீர்க்கதரிசனத்துடன் எழுதிய முகவுரைத் துதியே தேசியப் பதிகம்.*

*புகழ் மிக்க கைலாச பர்வதத்தை விட்டு, தேவ கந்தர்வர்களின் சுற்றுச் சூழலையும் விட்டு, மாணிக்க வாசகரின் திருவாசகத்தை, உயரிய உன் செவியால் கேட்டுக் களித்திட விழைந்து, வளமை மிக்க திருப்பெருந்துறையை அன்று வந்தடைந்தாய். இன்று இழி குணங்கள் கொண்ட இந்த அற்பனின் புன்சொற்களையும் கேட்க விரும்பினவனாய், சீரும் சிறப்பும் வளர்ந்தோங்கும் அருணாசலம் என்னும் செழும்பதியை வந்தடைந்துள்ளாய் தேசிக ரமண மகா தேவனே!*

*‘ஸ்ரீ ரமண புராணம்’ நூலின் உள்நுழைவுப் பொருட்களை இனிவரும் இதழ்களில் தொடர்ந்து காணலாம்...*

# ‘பகவான்’ – அவர் உபதேசம்தான் அவர்

***D. தியாகராஜன்***

அகங்காரம் என்பது இருள். தெளிவு என்பது ஒளி. பிரம்மாவும் ஹரியும் அகங்காரத்தினால் கட்டுண்டு இருந்தபோது, சிவபெருமான் ஒளித் திரளாய், தம்பமாய்த் தோன்றி அவர்களது அறியாமையைப் போக்கினார் என்கிறது அருணாசல மாஹாத்மியம்.

ஆன்மாவைப் பற்றிய விவேகம் என்பது ஒளியைப் போன்றது. அவ்வொளியானது ஞானிகளின் வாக்கிலும் பிரதிபலிக்கும்.

இதனை திருமந்திரம்,

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே

என்கிறது.

‘உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்’ என்று பாரதியாரும் இதனையே குறிப்பிட்டுள்ளார்.

எத்துனை நூற்றாண்டுகள் ஆனாலும் ஞானி தேகத்துடன் இல்லாது போனாலும் அவரை சிந்திக்கும் அல்லது அவரது அருளுரைகளை ஆழ்ந்து வாசிக்கும் எவருக்கும் ஞானத்தைப் பற்றிய தெளிவு சுடராக அவர்களுக்குள்ளும் பரவும்.

ஒருசமயம், கௌதம புத்தர் தனது சீடர்களிடம் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தபோது, அவரது சீடர் ஆனந்தா, புத்தரிடம், “நாங்கள் எவ்வளவு

பாக்கியசாலிகள், தங்களுடன் நேரில் உரையாடவும் தங்களது உபதேசங்களையும் கேட்கவும் செய்கின்றோம். அடுத்த தலைமுறையினருக்கு இந்த பாக்கியம் கிட்டாதே!" என்று வினவினார். அவரை இடைமறித்த சாக்கியமுனி, "எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் எனது உபதேசத்தை வாசிக்கும் ஒவ்வொருவருடனும் நான் நேரில் உரையாடுவேன். என்னை அவர்கள் அனைவரும் உணர்வர்" என்று அருளினார்.


குருவின் பொன்மொழிகளைக் கேட்கும்போதோ அல்லது வாசிக்கும்பொழுது, அந்த வரிகளின் கருப் பொருளானது, ஒளியாக, பிரகாசத்துடன், நேரே நம் அறிவினை அடைந்து தெளிவையும் ஞானத்தையும் நமக்குள் உணர உதவும்.

இந்த ஒளியானது வெறும் தொலைவில் உள்ள பொருள்களைக் காண்பதற்கு பயன்படும் ஒளியன்று. இந்த ஞான ஒளியானது ஒரு மாமனிதரைக் காணும்போது அவரது சாந்நித்தியத்தில் நம்மில் ஊடுருவி நமக்குள்ளும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகும்.

உருத்தெரி யெல்லை யுற்றுகண் ணுற்றாற்
கருத்தினாற் றூரக் கருதினா லும்மே
வருத்த முறாது வராதவே தாந்த
வருத்தவிஞ் ஞான மார்க்குமுண் டாமே.

"அருணாசலத்தைக் காணக்கூடிய எல்லையிலிருந்து, ஊனக் கண்ணால் தரிசித்தாலும் அல்லது வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து மனத்தினால் ஸ்மரித்தாலும்கூட, சாதன சதுஷ்டயங்கள் அப்யசித்து சிரமப்பட்டு முயற்சித்தாலன்றி உணர முடியாத அரிய மெய்யறிவினை (சொரூப ஞானத்தை) யாவரும் அடையலாம்" என்று பகவான் ரமண மகரிஷிகள் தனது ஞானத் தந்தையாம் அருணாசலத்தின் மகிமையை வியக்கிறார்.

தேகாத்ம பாவத்தை விட்டொழிக்க, இந்த தேகம் நானன்று என்று அன்பர்களுக்கு வலியுறுத்திய ரமண



மகரிஷிகள், "நான் எங்கே செல்கிறேன். இங்குதான் இருக்கிறேன்" என்று அன்பர்களுக்கு உறுதியளித்தது மட்டுமன்றி, தனது தேகத்தை விட்டு ஒளியாய் அருணாசலத்தில் கலந்து ஞானச் சுடரொளியாய் நான் அனைவருள்ளும் வியாபித்திருக்கிறேன் என்று உணர்த்தினார்.

அவர் தேகத்தை விட்டு 73 ஆண்டுகள் ஆனாலும் இந்தத் தலைமுறையின் ஒரு அன்பரோ, இனி வருங்காலங்களிலோ அவரது உபதேசங்களைப் பயிலும் ஒருவர் உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் அவர் சத்திய வாக்கினைப் பின்தொடர்வதன் வாயிலாக ரமண பகவானை நேரில் கண்டு உணரலாம்.

அன்பர் ஒருவர் பகவானிடம், "நீங்கள் ஏன் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு சத்தியத்தை போதிப்பதில்லை என்று கேட்டதற்கு, "நான் அதைச்

செய்யவில்லையென்று உனக் கெப்படித் தெரியும்? மேடைமீதேறி ஜனங்களுக்குப் பிரசங்கிப்பதுதான் போதனையா? போதனை யென்பது அறிவைப் புகட்டுவது. அதை மௌன மொன்றாலேயே உண்மையிற் செய்ய முடியும். ஒரு மணி நேரம் பிரசங்கம் கேட்டுவிட்டு, அதனால் தன் வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டு மென்னும் உறுதியுறாத ஒரு மனிதனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? ஒரு பரிசுத்த சந்நிதியிலமர்ந்து சிறிது நேரத்தில் தனது வாழ்க்கையின் நோக்கம் முழுதும் மாறப்பெற்றுப் போகும் வேறொருவனோடு அவனை ஒப்பிட்டுப் பார். இவ் விரண்டில் எது நல்லது? பயனின்றி உரக்கப் பிரசங்கம் புரிவதா? அல்லது மௌனமா யமர்ந்து ஆத்மசக்தியை எங்கும் பரப்புவதா?” என்று மகரிஷி விடையிறுத்தார்.

மௌனத்திலிருந்து எண்ணம் வந்தது. எண்ணத்தி லிருந்து அகந்தை, அகந்தையிலிருந்து பேச்சு. ஆகவே பேச்சிற்கு இவ்வளவு சக்தி இருந்தால் அதன் ஆதாரத்திற்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும்? என்று பகவான் ‘ரமணோபதேச ரத்னமாலை’ நூலிலும் மௌனத்தின் சக்தியை உபதேசித்திருக்கிறார்.

‘திருவாரூரில் பிறந்தால் முக்தி’, ‘காசியில் இறந்தால் முக்தி’, ‘அருணாசலத்தை நினைத்தால் முக்தி’ என்று ஒரு வழக்கு இருக்கிறது. இதில் இறுதிச் சொற்றொடர் மௌன தீக்ஷையைக் குறிக்கும். அருள் மௌனமாக பக்தன்மீது செலுத்தப்படும். அவன் அருணாசலத்தில் இருக்கத் தேவையில்லை. ஆசைகளை அழிக்க ஒரே வழி அனைத்து வேண்டுகோளையும் நிராகரிப்பதே. அவ்வாறு ஆசைகளை அழிக்கும் அண்ணாமலைமீது நாம் பக்தி செலுத்த வேண்டும். அண்ணாமலையை நினைக்க முக்தி என்பதன் பொருள் இதுவே.

“மௌனம் என்ப தென்ன?” என்று அன்பர் ஒருவர் வினவியதற்கு பகவான் இவ்வாறு விடையருளினார்:

“மனவாக்கு கடந்த நிலையே மௌனம்; அது மனத்தின் செயலின்றி நடைபெறும் தியானம். மனத்தை யடக்குவதே தியானம். ஆழ்ந்த தியானமே நிரந்தரப் பேச்சு. மௌனம் என்றால் எப்பொழுதும் பேசிக் கொண்டிருத்தல். அது வாக்கின் இடைவிடாப் பெருக்கு. அது பேச்சால் தடையுறும். வார்த்தைகள் இந்த மௌன பாஷையைத் தடுக்கின்றன.”

“அப்படியானால் நம் எண்ணங்களை ஒருவர்க் கொருவர் எப்படி அறிவித்துக் கொள்ள முடியும்?” என்று மீண்டும் அவ்வன்பர் எழுப்பிய வினாவிற்கு, மகரிஷிகள், “இருமை இருந்தா லல்லவோ அது அவசியம்!” என்று அழுத்தம் திருத்தமாக அன்பருக்கு தெளிவித்தார்.

பகவானது பிரதான உபதேசம் மௌனம் தான். அந்த மௌன உபதேசம் என்பது என்பது ஒளிமயமானது; சூரிய பிரகாசம் போன்றது. அது சொற்களைக் கடந்து அனைத்து இடங்களிலும் பரவக் கூடியது. சொற்கள், மொழி என்றால் அது குறுகிய வட்டத்தில் அடங்கிவிடும். அந்த மொழி அறிந்தவர்கள் அல்லது அதைப் படிக்கவோ கேட்கவோ தெரிந்தவர்கள் மட்டுமே அறிய முடியும். ஆனால் ஒளிக்கு அந்த வரையறை கிடையாது. ஆகையால்தான் பகவான் தேகத்தை விட்டு அருணாசலத்தில் ஒளியாக ஐக்கியமாகிறார். பகவான் அனைவருள்ளும் ஒளியாக வியாபித்திருக்கிறார்.

எளிமையாகவும், மானஅவமானத்தில் சமபாவ முடைய வனாய் பகைவர்களிடத்திலும் நண்பர் களிடத்திலும் ஒத்த கருத்துடன் ஒரே மாதிரி இருந்து தன்னுடைய முயற்சி எல்லாம் நீங்கி எவன் இருக்கிறானோ அவனே எல்லாக் குணங்களையும் கடந்தவன் என்று அழைக்கலாம்.

’மெய்த்திருப்பதம் மேவு’ என்ற போதினும்,
’இத் திருத்துறந்து ஏகு’ என்ற போதினும்,
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும்முகத்தினை உன்னுவாள்.

"உண்மையான அரசபதவியை அடைக என்று (மன்னவன்) கூறிய சமயத்திலும்; இந்த அரச பதவியை விட்டு விட்டு கானகம் செல்க என்று (கைகேயி) கூறிய சமயத்திலும்; எப்போதும் வாடாத ஒருபடித்தாக இருக்கும் மலர்ந்த செந்தாமரையைப் போன்றிருக்கும் ஓவியத் தாமரை போன்றது இராமன் முகம்" என்று இராமபிரானின் சமநிலையை கம்பர் பாடுகின்றார்.

இதனையே 'ரமண சத்வாரிம்சத்'தில் (ரமண நாற்பது),

ப$^4$ஹுமா னவஶா த$^3$யதா ஸுகி$^2$தா
மவமா னததே ரவிது$^3$ னவதா நு

"வெகுமானத்தால் மகிழ்ச்சி யுறாதோன், அவ மானத்தால் அகம் வாடாதவன்" என்று கணபதி முனிவர் பகவானை போற்றிப் பாடுகிறார்.

பகவான் 'உள்ளதை' உரைத்தார். சொன்னதை செயலிலும் செய்து காட்டினார். எளிமையை உபதேசித்தார். எளிமையாய் வாழ்ந்தும் காட்டினார்.

பகவானது எளிமையையும் தனித்தன்மையையும் ஆர்தர் ஆஸ்போர்ன் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"ஏதோ எல்லோரையும் விட உயர்ந்த நிலையில் இருக்கிறார் என்பதால் மற்றவர்கள் அவர்முன் மண்டியிடவில்லை. ஏனெனில் அவரைப்போல யாரும் எளிமையாகவோ இயல்பாகவோ இருக்க முடியாது. நேரில் கண்ட தெய்வத்திடம் மனிதனுக்கு இயல்பாக உண்டாகும் பக்தியினாலேயே மகரிஷியை அவர்கள் தொழுதனர்.

பகவானது தோற்றமும் நடைமுறைகளும் ஏதோ நம் வீட்டில் உள்ள ஒரு பெரியவரை காண்பதுபோல் தான் இருந்தது. ஞானி என்றால் அவர் ஏதோ விண்ணுலகத்தில் இருந்து தோன்றி வந்தவர் அல்லர் என்பதை உணர்த்தும் விதமாக பகவான் இயல்பாகவும் எளிமையாகவும் சுமார் 54 ஆண்டுகள் அருணாசலத்தில்

வாழ்ந்து காட்டினார். தனக்கென எதையும் சேமித்து வைத்துக் கொள்ளவில்லை. அவர் உணவை யாசித்துத்தான் உண்டார்.

ஒரு மடத்தலைவருக்குரிய அதிகாரமோ அல்லது தோரணையோ அவரிடத்தில் இல்லை. மாறாக அவருடைய பேச்சு எதைப் பற்றி இருந்தாலும் அதில் நகைச்சுவை கலந்திருக்கும். அவருடைய சிரிப்பு அங்குள்ளவர்களையெல்லாம் தொற்றிக் கொள்ளும்.

எதையும் தத்துவரீதியாகப் பார்க்காமல் செயலில் கொண்டுவரவே பார்ப்பார். அவருடைய அன்றாட வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட அட்டவணைப்படி, நேரம் தவறாமல் நடந்தது. சிறு சிறு விஷயத்திலும் கூட நேர்த்தியைக் கடைப்பிடித்தார். புத்தகங்கள் அவற்றிற்குரிய இடத்தில் இருந்தன. சோபாவை மூடும் துணிகள் சுத்தமாகவும் அழகாகவும் மடிக்கப்பட்டு வைக்கப்பட்டன. அவரது கையெழுத்து அச்சு போன்று நேர்த்தியாகவிருந்தது. ஆச்ரமத்தின் வாழ்க்கை ஒரு சீரான கதியில் சென்றது. வருபவர்கள் எல்லோரிடமும் அவர் அனுசரணையாகவும் கனிவாகவும் அன்பாகவும் பழகினார்.

'ஆன்ம விசாரம் ஒன்றுதான் குறையற்ற வழி. ஒரே நேரான வழி. எந்தவித நிபந்தனையுமில்லாமல் முழுமையான ஆன்மாவாக இருக்கும் நீயே என்று அறிவதற்கு இதுதான் ஒரே வழி' என்கிறார். தான் பெற்ற இந்த ஞானானுபவத்தை சாமானியர்களும் அடைய முடியும் என்பதே அவரது போதனையாக இருந்தது.

பகவான் தேகாபிமானத்தை விட வலியுறுத்தினார். வாழ்க்கையில் ஏற்படும் எல்லா சூழ்நிலைகளுக்கும் வலி, நோய் முதலியவைகளுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். இதன்மூலம் ஆன்மாவில் நிலைத்திருக்கும் ஒருவனுக்கு வலி போன்றவை அவனுடைய நிலையை மாற்றாது என்று நமக்கு மௌனமாக உபதேசித்தார்.

எட்டாக் கனியாக விளங்கிய 'ஆன்ம விசாரம்' என்ற நேரடியான இந்த ராஜபாதையை, நமக்காக மீண்டும் அண்ணாமலையார் பகவான் ரமணரின் உருவில் வந்து சுட்டிக்காட்டி யிருக்கிறார். மலைமேல் யாருக்கும் தெரியாத இடத்தில் இருந்த மறை பொருள், மலையடி வாரத்தில், ஆச்ரமத்தில் ரமண உருக்கொண்டு வந்து இன்றும் அவருடைய சமாதியில் நிலைத்திருக்கிறது.


'நான் இங்கே தான் இருக்கிறேன்' எனும் வாக்கியத்திற்கேற்ப, அவர் இங்கே பிரசன்னமாக விளங்குகின்றார். அதேநேரத்தில் அருணாசல ரமணனாக பக்தர்கள் இதயத்துள்ளும் வாசம் செய்து கொண்டு அவர்களை வழிநடத்துகின்றார்."

பகவானுடன் அவர் அருகிலேயே இருந்து அவர் வாய்மொழிகளைக் கேட்டவர்கள் பாக்கியசாலிகள் என்றும் அந்த வாய்ப்புக் கிடைக்காதோர் எல்லாம் பாக்கியமற்றவர்கள் என்று கருத வேண்டாம்.

பகவான் உபதேசங்களை எந்தக் காலத்தில் எவர் படிக்கின்றாரோ அவர்கள் பகவான் அருகில் இருந்து அவரது வாய்மொழியைக் கேட்பது போன்றதே. பகவான் தேகத்துடன் இருந்த காலத்தில் இருந்தவர்கள் அவரது இருப்பை எவ்வாறு உணர்ந்தனரோ அதற்கும் தற்போது அவரது உபதேசங்களைப் படிப்பவர்களுக்கும் பின்பற்றுவர்களுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. பகவானது உபதேசம் தான் அவர்.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2023

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 2 | ஞாயிறு | இரவு 8.21 | 3 | திங்கள் | மாலை 5.08 |
| ஆகஸ்ட் | 1 | செவ்வாய் | அதிகாலை 3.51 | 2 | புதன் | நள்ளிரவு 12.01 |
| ஆகஸ்ட் | 30 | புதன் | காலை 10.58 | 31 | வியாழன் | காலை 07.05 |
| செப்டம்பர் | 28 | வியாழன் | மாலை 6.49 | 29 | வெள்ளி | காலை 3.27 |





## மஹா பூஜை

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மை சமாதி தினம் மஹா பூஜையாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு 12/6/2023 திங்கட்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் (தாயார் சந்நிதி) மஹா பூஜை சிறப்பாக நடைபெற்றது.*

*மகனின் திருக்கரத்தால் முக்தியடையும் பேறுபெற்ற அழகம்மையின் சமாதி ஆலயமான மாத்ருபூதேச்வரர் ஆலயம் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், மற்றும் இராமநாதபுரம் முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமணாலயத்தில் நாள்முழுவதும் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றுக்கும் மேலான ரமண அன்பர்கள் முழு நேரமும் அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். இவ்விழாவில் சூளைமேடு ரமணன் குழுவினர் முன்னின்று பங்கேற்றனர்.*




*மறுவாரத்தில் ரமண கேந்திரத்திலும் திருவாசக முற்றோதல் நடைபெற்றது. மதிய இடைவேளையில் திரு. சத்குருநாத ஓதுவார் தனது பங்காக திருவாசக பதிகங்கள் சிலவற்றை ஓதி மகிழ்வித்தார். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ ரமணாச்ரம தமிழ்ப்பாராயணம் – புதிய ஆன்ட்ராய்டு செயலி

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் பக்தர் ஒருவர் ஸ்ரீ ரமணாச்ரமத் தமிழ்ப் பாராயணத்திற்கான ஒரு புதிய ஆன்ட்ராய்டு செயலியை உருவாக்கியுள்ளார். ஊடாடும் வசதியற்ற முன்னர் இருந்தப் பழைய செயலிக்கு மாற்றாக இந்தப் புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய தொழில்நுட்பம் முழு தமிழ்ப் பாராயணத்தையும் ஆன்ட்ராய்டு செயலியில் நேர்த்தியாக உருவாக்குவதை சாத்தியமாக்கியுள்ளது. இந்த ஆன்ட்ராய்டு செயலியை (Android App) கீழ்க்கண்ட இணைப்பின் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

*https://play.google.com/store/apps/details...*

*தமிழ்ப் பாராயணப் பாடல்களை தமிழ் மொழி தெரியாதவர்கள் பாராயணம் செய்வதற்கு ஏதுவாக ஆங்கில எழுத்துப் பெயர்ப்பாகப் (English Transliteration) படிப்பதற்கும் பாடல்களை ஒலி வடிவில் கேட்பதற்கும் மற்றும் பாடல்களைத்*

*தரவிறக்கம் செய்வதற்கும் வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. IPhone செயலி (Iphone App) தரவிறக்கம் செய்ய https://apps.apple.com/app/id1644920339 ஐபோன் பயன்பாட்டில், அன்பர்கள் தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட பாடலுக்குச் சென்று அந்தக் குறிப்பிட்ட பாடலை இயக்க முடியும். இது பகவானின் படைப்புகளைக் கற்றுக்கொள்வதையும் மனப்பாடம் செய்வதையும் எளிதாக்குகிறது.*

## ஸ்ரீ ரமணாச்ரம வேத பரீக்ஷை

*பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அநுக்ரஹத்தால் 1937 முதல் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் ஸ்ரீ கிருஷ்ண யஜூர் வேத பாடசாலை சிறப்பாக இயங்கி வருகின்றது.*

*ஸ்ரீ ரமணாஸ்ரமம் சார்பாக கடந்த ஆறு வருடங்களாக ரிக், யஜூர், சாம வேத வித்யார்த்திகளுக்கு ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் பரீக்ஷை நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் ஜூன் 26, 27 மற்றும் 28 ஆகிய மூன்று நாட்களில் பரீக்ஷை நடைபெற்றது.*

*இவ்வருடம் அதர்வன வேத மாணவர்களும் தேர்வில் பங்கேற்றனர். இதில் பல்வேறு ஊர்களில் இருந்து சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர். 28 ஆம் தேதியன்று காலை 9.00 மணி முதல் கல்வைத்தவாரம் நடைபெற்றது. பின்னர் மாலை 7.00 மணி அளவில் வேத பரீக்ஷையில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு ஆச்ரமத் தலைவர் வேங்கட். S ரமணன் அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் சன்மானம் வழங்கினார்.*





## பசு லக்ஷ்மி ஆராதனை - 2023

*பசு லட்சுமியின் ஆராதனை இன்று (30-6-2023, வெள்ளிக்கிழமை) ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் சிறப்பாக நடந்தேறியது. சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பசு லக்ஷ்மி சமாதிக்கு விசேஷ பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பிரத்யேகமாக பசு லக்ஷ்மிக்கென பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி அன்பர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*

*சென்னை ரமண கேந்திரம் மற்றும் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் பசு லக்ஷ்மி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதிகாலை 6.30 மணிக்கு கோபூஜை, வேதபாராயணம் மற்றும் சிறப்புப் பாராயணம் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## குருபூர்ணிமா

*ஸ்ரீரமணாச்ரமத்தில், குரு பூர்ணிமாவை முன்னிட்டு 3/7/2023 திங்கட்கிழமையன்று பகவான் சந்நிதியில் ஆச்ரமம் சார்பில் சந்நியாசிகள் சிலருக்கு வஸ்திரங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.*

# தொராப்ஜியின் நினைவுகள்

*இனிப்பு இட்லிகள்*

*பகவானைத் தரிசித்த பார்ஸி பக்தர்களில் ஃப்ராம்ஜி தொரப்ஜியும் ஒருவர். இவர் சென்னையில் ஒரு சினிமா கொட்டகைக்கு உரிமையாளர். புதிய படம் திரையிடப்படும் போதெல்லாம் ஆச்ரமத்திற்குக் கணிசமான நன்கொடை அனுப்புவதுண்டு.*

*ஒருசமயம், தன்னுடைய மகனை பகவானின் தரிசனத்திற்காக முதன்முறையாக அழைத்துக் கொண்டு வந்திருந்தார். காலை உணவின்போது இட்லிகள் பரிமாறப்பட்டன. அந்தப் பார்ஸியின் மகனோ அதுவரை இட்லி சாப்பிட்டதில்லை. எனவே அது பிடிக்காமல் முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டான். இதை பகவான் கவனித்திருக்க வேண்டும். அடுத்தநாள் காலை உணவு சாப்பிட அந்தப் பையன் உள்ளே வரத் தயங்கினான். ஆனால் அவனுடைய தந்தை அவனைப் பிடித்து உள்ளே தள்ளினார்.*

*அவன் பகவானுக்கு அருகில் உட்கார நேர்ந்தது. பகவான் அவனைப் பார்த்து அர்த்தமுள்ள புன்னகையை உதிர்த்தார். அவனது இலையில் இட்லிகள் பரிமாறப்பட்டபோது, அந்த இட்லிகள்மேல் நிறைய சர்க்கரை தூவி இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். அவை மிகவும் ருசியாக இருந்தன. பகவான் முன்னரே சமையலறை பக்தர்களிடம் இவ்வாறு இட்லிகளை இந்தப் பையனுக்கு மட்டும் பரிமாறும்படி கூறியிருந்தார்.*

*இறுதி நாட்களிலும் பகவான் காட்டிய கருணை*

*1950ஆம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் ஃப்ராம்ஜியின் மகன் தொராப் தன்னுடைய தந்தையுடன் நிர்வாண ரூமுக்கு அருகில் மற்றவர்களுடன் உட்கார்ந்திருந்தான். அவனுடைய தந்தை மற்றவர்களைப்போல பகவானுடைய சீர்குலைந்து வரும் ஆரோக்கியத்தைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். நள்ளிரவு கடந்தது. அவன் உட்கார்ந்தபடியே தூங்கிவிட்டான்.*

*தந்தையின் கண்களோ நிர்வாண ரூமின் கதவை நோக்கிய வண்ணம் இருந்தன. சுமார் இரவு 1 மணிக்கு பகவான் பாத்ரூம் செல்வதற்காக வெளியே வந்தார். அந்த இளைஞன் தூங்கிக் கொண்டிருந்தான். தந்தை பையனை எழுப்பி பகவானைத் தரிசனம் செய்யும்படி கூறினார். அதைக் கண்ட பகவான் கருணையுடன் தன்னுடைய கைகளை ஆட்டி, தூங்கும் பையனை எழுப்பாதீர்கள் என்று கூறினார். இந்த இறுதி நாட்களில்கூட பகவானின் அன்னையொத்த வாத்சல்யம் ஃப்ராம்ஜியை பிரமிக்க வைத்தது.*

# தொராப் ஃப்ராம்ஜி



*பகவானின் பழம்பெரும் பக்தரான திரு. தொராப் ஃப்ராம்ஜி அவர்கள் தனது 93ஆம் வயதில் ரமண பதமடைந்தார்.*

*தொராப் ஃப்ராம்ஜி தனது 13ஆம் வயதில் தனது தந்தை ஃப்ராம்ஜி மற்றும் குடும்பத்தாருடன் முதன்முதலில் 1943 ஆம் ஆண்டில் ஆச்ரமம் வந்து பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர் ஆவார்.*

*1940களில் இவரது தந்தை மும்பையில் இருந்த தனது வியாபாரத்தினை சென்னைக்கு மாற்றிக் கொண்டு பகவான் தரிசனத்திற்காக மாதந்தோறும் ரமணாச்ரமம் வந்து சென்றனர். பின்னர் ஆசிரமத்திற்கு அருகில் ஒரு இடத்தினை வாங்கி, திருவண்ணாமலையிலேயே தங்கலாயினர்.*

*ஆச்ரம அருகிலேயே பலகாலங்கள் எளிமையாக வாழ்ந்து வந்த திரு. தொராப்ஜி அவர்கள் தனது தள்ளாத வயதிலும் ஆச்ரமம் மற்றும் வேறு எங்குச் சென்றாலும் நடந்தே செல்லும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார்.*

*கடந்த மே 23ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணியளவில் ரமணாச்ரமம் எதிரில் அமைந்துள்ள தட்சிணாமூர்த்தி சன்னதி சாலையைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது, ஆட்டோ ரிக்ஷா மோதியதில் தொராப் அவர்கள் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சை பயனளிக்காமல் அன்று பின்னிரவு 12.10 மணியளவில் வேலூரில் காலமானார்.*

*அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும் ரமண அன்பர்களுக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# வேம்புலூர் வெங்கடரத்னம்



*திரு. V. V. ரத்னம் (வேம்புலூர் வெங்கடரத்னம்) திருப்பதிக்கு அருகில் உள்ள கூடூரில் வெங்கையா மற்றும் கிருஷ்ணம்மா தம்பதியினருக்கு இரண்டாவது குழந்தையாக 1954ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் பிறந்தார்.*


*1975களில் திருவண்ணாமலைக்கு வந்த இவர் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் அருணாசலம் மற்றும் ரமணாச்ரமத்திலேயே வசித்து வந்தார்.*

*ஸ்ரீ ரமணாச்ரம புத்தகாலயத்தில் புகைப்படப் பிரிவில் கடந்த 25 ஆண்டுகளாக சேவை செய்து வந்தார். மேலும் பல வருடங்களாக ஆச்ரம 'பழைய ஹால்' எனப்படும் தியான அறையினை அதிகாலை மற்றும் இரவு என இரு வேளைகளும் சுத்தம் செய்யும் பணியினையும் செவ்வனே செய்து வந்தார்.*

*திரு. டென்னிஸ் ஹார்டெல், 'தி மகரிஷி' சஞ்சிகையில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு திரு. ரத்னம் அவர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:*

*"அவர் யாரிடமும் அதிகம் பேசி நான் பார்த்ததேயில்லை. அதிகாலையில், மதிய மற்றும் இரவுகளில் தியான அறையில், சமாதி ஹாலில் சீரான முறையில் ஜெபத்திலும் தியானத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். பூஜை சமயங்களில் தாயார் சந்நிதியில் மணியினை ஒலிக்கச் செய்து கொண்டிருப்பார். அவர் வாழ்நாள் முழுவதுமே சாதனை மற்றும் அர்ப்பணிப்பு என பகவானைச் சார்ந்தே அமைந்தது. ஆச்ரமத்திற்கு விலைமதிப்பற்ற ரத்னமாக விளங்கினார்."*

*ஆச்ரம வேதபாடசாலைக்கு எதிரில் ஆச்ரமவாசிகள் தங்கும் அறையில் வசித்து வந்த இவர் கடந்த 25/6/2023 அன்று பகவான் பதமடைந்தார். இவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*




# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா

செப்டம்பர் 1, 2022 முதல் டிசம்பர் 28, 2023

பகவானின் 144–ஆவது ஜயந்தி வரை 16 மாதங்கள்

ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா

வைபவம் கொண்டாடப்படுகின்றது.

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.


















செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆச்ரம நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பு

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

